வருந்திஞர்கள். ஒரு சமயம் இரண்டு சகோதரர்கள் ராச்சியத்தை அடைய முயன்று சச்சரவிட்டுக்கொண்டிருந்தார்கள். அதன் விளைவால், ரோமர்களின் ஆதிக்கம் பாலஸ்தீன நாட்டில் ஏற்படலாயிற்று.

இயேசுநாதர் பிறந்த சமயம், பாலஸ்தீனத்தை ஆண்ட அரசன் பெயர் ஏரோது. இவன் ரோமானியர்களுக்குச் சிற்றரசஞக இருந்து ஆட்சி செலுத்தி வந்தான்.

இவன் மிகவும் பொல்லாதவன்; அதிகார வெறி பிடித்தவன். தனது கையைவிட்டு ஆட்சி போய்விடக் கூடாது என்பதற்காக, எத்தகைய கொடிய காரியத்தையும் செய்யத் தயங்காதவன். அதன் பொருட்டு, தனக்குப் பிறந்த மக்களேயே இவன் கொன்று இருக்கிருன்; மனைவியைக் கொன்று இருக்கிருன்; மைத்துனனைக் கொன்று இருக்கிருன்.

இவன் ஆட்சியில் யூத மக்கள் பெரிதும் அவதிப்பட்டார்கள்; அதிகார வெறிபிடித்தவனுயும் ரோமானியச் சக்ரவர்த்தியின் கையாளகவும் இருந்து ஆட்சிபுரிகிற ஏரோது மன்னனிடம் அகப்பட்டுக்கொண்டு தவித்தார்கள். அடிமைக்கு அடிமையாக வாழ நேர்ந்திருக்கும் அவல நிலையை நினைந்து நினைந்து வருந்திஞர்கள். தங்களை விடுவித்துக்கொள்ள வழி வகைகள் புலப்படாது கலங்கிஞர்கள்.

அதிகார வெறி பிடித்தவர்கள் சாகும் தறுவாயிலும் கொடுமை செய்வார்கள் என்பதற்கு, ஏரோது மன்னன் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிருன். அவன் செய்த கொடுமை என்ன என்பதை இனிப் பார்க்கலாம்.

நல்ல அரசன் எவனும் இறந்து போனல் மக்கள் கண்ணீர்வடித்து அழுவதனையும், கொடியஅரசன் யாராவது இறந்து போனல், ''சனியன் தொலைந்தான்!'' என்று மக்கள் ஆனந்தப்படுவதையும் ஏரோது மன்னன் அறிவான். நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையி லிருந்த ஏரோது மன்னன், தான் இறந்த பின்னர் மக்கள் கண்ணீர் வடித்து அழ வேண்டும் என்று ஆசைப்பட்டான். அதற்காக, அந்த

மன்னன் ஒரு ஏற்பாடு செய்தான். தான் இறப்பதற்கு நான்கு தினங்களுக்கு முன்னர், யூதர்களில் சிறந்தவர்களையும் அறிவாளிகளையும் பிரமுகர்களையும் தன்பால் வருமாறு உத்தரவிட்டான். மரணப் படுக்கையில் கிடக்கும் அரசன் தங்களுக்கு ஏதாவது நன்மைசெய்யலாம் என்ற கருத்துடன், அரசனைக் காண யூத குலப் பிரமுகர்கள் ஆவலோடு சென்றார்கள். வந்ததும், அவர்களை எல்லாம் ஒரு இடத்தில் தங்க ஏற்பாடு செய்தான் ஏரோது மன்னன். பிறகு தன் சிப்பந்திகளிடம் தான் இறந்த அன்று, தன்னைக் காண வந்திருக்கும் யூதப் பிரமுகர்கள் எல்லாரையும் கொன்று விடும்படி கூறினான்!

இப்படி ஒரு கொடிய ஏற்பாட்டைச் செய்த நான்காவது நாளன்று ஏரோது மன்னன் இறந்து போனான்.

இது சமயம் ரோமன் நாட்டுக்கு, அகஸ்டஸ் சீசர் சக்ரவர்த்தியாய் இருந்தார். இறந்துபோன ஏரோது மன்னனின் விருப்பப்படி அவனுடைய மூன்று புதல்வர்களுக்கும் ஆட்சிப் பொறுப்பை அவர் வழங்கினார்; குறிப்பிட்ட ஒவ்வொரு பகுதிக்கு ஒவ்வொருவனை அரசனாக நியமியாமல், ஆட்சியாளனாக மட்டும் அவர் நியமித்தார்.

ஏரோதின் புதல்வன் ஆர்க்கிலஸ் யூதேயா, சமாரியா, இந்துமேயாப் பகுதிகளுக்கு ஆட்சியாளனாக நியமிக்கப் பட்டான். தன் தந்தையைப் போலவே இவன் கொடியவனாய் இருந்ததால், மக்கள் இவன் ஆட்சியை வெறுத்தார்கள். சக்ரவர்த்தியிடம் சென்று முறையிட்டுக்கொண்டார்கள். ஆகையால், ஆர்க்கிலஸை நீக்கிவிட்டு, அந்தப் பகுதியைத் தனது நேரடி நிர்வாகத்தின் கீழ் அகஸ்டஸ் சக்ரவர்த்தி வைத்துக்கொண்டார்.

பத்து ஆண்டுகளுக்குப் பின்னர், அகஸ்டஸ் சீசர் இறந்து போனார். பிறகு, அவருடைய மகன் தைபீரியஸ் ஆட்சி பீடத்துக்கு வந்தான். அவன், பொந்தியஸ் பைலேட் என்பவனை, யூதேயாப் பகுதிக்குக் கவர்னராக நியமித்தான்.

பொந்தியஸ் திறமையான நிர்வாகி அல்லன்; இவன்

ஆட்சி செய்தபோதுதான், இயேசுநாதர் சிலுவையில் ஏற்றப்பட்டார் என்பதை நாம் படிக்கப் போகிறோம்; இவன் கெட்டவன் இல்லை என்பதையும், திறமையில்லாதவன் என்பதையும் தெரிந்துகொள்ளப் போகிறோம்.

சமய நிலை: ஒவ்வொரு மனிதனும் தன் நாடு, மொழி, இனம், சமயம் இவற்றைப்பற்றிப் பெருமையாகப் பேசுவது உண்டு. தான் பிறந்த நாடே புண்ணிய பூமி என்றும், தான் பேசும் மொழியே உயரிய மொழி என்றும், தான் பிறந்திருக்கும் இனமே மேன்மையான இனம் என்றும், தான் பின்பற்றும் சமயமே சிறந்த சமயம் என்றும் எண்ணுவது உண்டு. இந்த எண்ணம் யூதர்களுக்கு அபாரமாக உண்டு.

யூதர்களின் மூதாதையர்களில் மோசஸ் என்பவர் முக்கியமானவர்; இவர் இயேசுநாதர் பிறப்பதற்குச் சுமார் ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். மக்கள் எப்படி எப்படி வாழ வேண்டும் என்பதை, மோசஸ் என்னும் இந்தப் பெரியவர் மூலம் பத்துக் கட்டளைகளை, இறைவன் பிறப்பித்தார். அவை வருமாறு:

1. நான் உங்களுக்கு இறைவன்; என்னைத் தவிர வேறு தெய்வங்களை நீங்கள் வணங்குதல் கூடாது.
2. ஆண்டவன் பெயரைத் தூஷிக்கலாகாது.
3. ஏழாவது நாளான சனிக்கிழமை ஓய்வு நாள் ஆகும். அன்று எந்தக் காரியத்தையும் செய்யலாகாது; ஓய்வுடன் இருந்து இறைவனை நினைத்தல் வேண்டும்.
4. தாய் தந்தையரை மதித்துப் போற்று.
5. கொலை செய்யாதே.
6. விபச்சாரம் செய்யாதே.
7. திருடாதே.
8. பிறருக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதே.
9. பிறன் மனைவிமீது ஆசைகொள்ளாதே.
10. பிறர் பொருளைத் திருடாதே.

இந்தப் பத்துக் கட்டளைகளை, பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டுதான், யூத சமயக் கோட்பாடுகளும், கிறிஸ்தவ ஒழுக்கமும் உள்ளன என்று கூறலாம். இயேசுநாதர் இந்தக் கட்டளைகளைப் பாராட்டிப் பேசி இருக்கிறார்,

கோட்பாடுகளை யாரும் எளிதில் கூறிவிடலாம். ஆனால் அவற்றைக் கடைப்பிடிக்கும்போது சிக்கல்கள் தோன்றுவது இயல்பு. அப்படித் தோன்றும் சிக்கல்களைத் தவிர்க்க முய லும்போது, கருத்து வேற்றுமை ஏற்படுவதும், அதனால் வேறு பட்டு மக்கள் பிரிந்து போவதும் உண்டு. அப்படி ஒரு நிலை, இயேசுநாதர் பிறந்த சமயம் யூதர்களிடையே நிலவிற்று.

சமய சம்பந்தமாய் இரு வேறு கருத்துக்கொண்ட இரு தொகுதியினர் அது சமயம் பாலஸ்தீனத்தில் வாழ்ந்து வந் தார்கள். ஒரு தொகுதியாரைப் பரிசேயர் என்றும், மற்றொரு தொகுதியாரைச் சதுசேயர் என்றும் கூறுவர்.

பரிசேயர் தங்களை மேன்மையானவர்களாய்க் கருதிக் கொண்டு, வெளிப் பகட்டான ஆசாரங்களிலும் சடங்குகளி லும் அதிக ஆர்வம் காட்டி வந்தார்கள். அதனால், அகச் சுத்தத்தைக் காட்டிலும் புறச் சுத்தத்தைப் பெரிதும் போற்றி னார்கள். சனிக்கிழமை யன்று ஓய்வாக இருக்க வேண்டும் என்பது யூத மதக் கோட்பாடு. அன்று தினம் பரிசேயர்கள் நோன்பு அனுசரிக்க வேண்டும். அதற்காகக் கயிற்றில் முடிச் சுப் போடுவதைக்கூடக் குற்றம் என்பார்கள். அன்று விஷப் பூச்சிகளைக் கொல்லுவதும் பாவம் என்பார்கள்; கைகொட்டிச் சிரித்து ஆனந்தமாக இருப்பதைக் குற்றம் எனபார்கள்; இப் படி சில்லறை வெளிப்படை ஆசாரங்களில் அவர்கள் கவனம் சென்றதே யல்லாமல், ''அண்டை அயலாரை உன்னைப்போல் நேசி. எல்லாரிடமும் அன்பாக நடந்துகொள். மரியாதை யாக நடந்துகொள்'' என்பது போன்ற அடிப்படைக் கொள் கைகளில் அவர்கள் நாட்டம் செலுத்தவில்லை.

இயேசுநாதரை எதிர்த்தவர்களில் இவர்கள் முக்கிய மானவர்கள்.

சதுசேயர் என்பவர்கள், கோட்பாடுகள்தாம் முக்கியம். புற ஆசாரங்களும் சடங்குகளும் அவ்வளவு முக்கிய மன்று என்று சொல்லி வந்தார்கள். அதனால் சுகபோகத்திலும் சொகுசான வாழ்க்கையிலும் கவனம் செலுத்தினார்கள். அன்னியர்களோடு தாராளமாகக் கலந்து பழகினார்கள். அதனால் இவர்களிடம் மதாபிமானமும் இல்லாது போயிற்று.

தேசாபிமானமும் இல்லாது போயிற்று. நாடு அன்னியருக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதைப்பற்றி இவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை.

பண்பாட்டு நிலை: பாலஸ்தீனத்தின் வட பகுதி மிகவும் செழிப்பான பகுதி. எனவே, இந்தப்பகுதியில் பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்கள் குடியேறி வசித்தார்கள். பெனீஷியர்கள், சிரியர்கள், அராபியர்கள், கிரேக்கர்கள், முதலிய வேற்று இனத்தவர்கள், இந்தக் கலிலேயாப் பிரதேசத்தில் மிகுதியாக வசித்தார்கள்.

வடக்கே இருக்கும் இந்தக் கலிலேயாப் பிரதேசம் செழிப்பு மிக்கதாய் இருந்தபோதிலும், யூதர்கள் பெருமையுடன் மிகவும் போற்றிக் கொண்டாடுகிற தேவாலயம் தெற்கே ஜெருசலம் நகரில் இருந்தது அதனால் தென் பகுதியில் இருக்கும் யூதேயாவில்தான் யூதர்கள் மிகுதியாக வசித்தார்கள். எனவே, யூதர்களின் முக்கிய சபையான சனதரீம் சபை, ஜெருசலம் நகரில்தான் இருந்தது இதனால், யூதேயாவில் வாழும் யூதர்கள், வடக்குக் கலிலேயாவில் வாழும் யூதர்களைக் காட்டிலும், மேன்மையும் பெருமையும் பெற்றவர்களாகத் தங்களைக் கருதிக்கொண்டார்கள். ஆகையால், கலிலேயாப் பகுதியில தீர்க்கதரிசிகள் யாரும் தோன்ற முடியாது என்றும், நாசரத்திலிருந்தோ அதன் சுற்றுப்புறங்களிலிருந்தோ நன்மை எதுவும் ஏற்பட முடியாது என்றும் திடமாக நம்பினார்கள்.

இந்த இரு பெருமைகளைத் தவிர்த்து, மற்றும் ஒரு விஷயத்திலும் யூதேயாவில் வாழும் யூதர்கள் தங்களைப் பெருமையுடையவர்கள் என்று கருதிக்கொண்டார்கள்.

கலிலேயாப் பகுதியில் பல்வேறு மொழி பேசும் மக்கள் வசித்த காரணத்தால், அந்தப் பகுதியில் வாழும் யூதர்கள் பேசும் மொழி, ஒரு கலப்பட மொழியாகவும் கொச்சை மொழியாகவும் இருந்தது. உச்சரிப்பிலும் குற்றங் குறைகள் தவறுகள் நேருவது உண்டு. கலிலேயாப் பகுதி யூதர்கள் பேசும் மொழியைச் செவிமடுக்கும்போது, யூதேயாப் பகுதி யூதர்கள் கேலி செய்து சிரிப்பார்கள்.

கலிலேயாப் பகுதி யூதர்கள் பேசின மொழியும் ஹிப்ரு மொழிதான். ஆனால், சிதைந்த, கலப்படமான ஹிப்ரு மொழி அது. அதனால் அந்த மொழியை அராமிக் மொழி என அழைத்தார்கள். பேச்சுவழக்கில் உள்ள மொழியை அராமிக் மொழி என்றும், நூல்வழக்கில் உள்ள மொழியை ஹிப்ரு மொழி என்றும் வேறுபடுத்திக் கூறி வந்தார்கள்.

இயேசுநாதர் பேசின மொழி, இந்த அராமிக் மொழி தான். மக்களிடையே தமது போதனைகளைப் பரப்புவதற்கு, அராமிக் மொழியையே இயேசுநாதர் பயன்படுத்தினார்.

இயேசுநாதர் அராமிக் மொழியில் செய்த போதனைகளை எல்லாம் குறிப்புகள் எடுத்து, அந்தக் காலத்தில் புகழுடனும் செல்வாக்குடனும் விளங்கிய கிரேக்க மொழியில் எழுதி வைத்தார்கள்.

ஆரம்ப காலத்தில் இயேசுநாதர் செய்த போதனைகள் எல்லாம், எழுத்து வடிவில் முதன் முதலாகக் கிரேக்க மொழியில்தான் வெளிவந்தன. பின்னர்தான் பற்பல மொழிகளிலும் அந்தப் போதனைகளை, மொழிபெயர்த்து வெளியிட்டார்கள்.

இயேசுநாதர் பொது வாழ்க்கையில் ஈடுபட இருந்த சமயம், நாடும் மக்களும், இருந்த நிலைமைகளை ஒருவாறு மேலே பார்த்தோம். இனி, பொது வாழ்க்கையில் ஈடுபட அவர் எப்படி எப்படித் தயார் செய்துகொண்டார் என்பதைப் பின்வரும் அத்தியாயங்களில் பார்க்கலாம்.

முன்னோடியின் அறிவிப்பு

ஜெருசலத்திலிருந்து திரும்பிய பின்னர், பதினெட்டு ஆண்டுகள்வரை இயேசுநாதர் தம் தாய் தந்தையருடன் நாசரத்தில் வசித்து வந்தார். இந்தப் பதினெட்டு ஆண்டுகளுக்கு இடையில், இயேசுநாதருடைய வளர்ப்புத் தந்தை சோசப் காலமாகிவிட்டார். மேரியின் பெற்றோரும் காலமாகி விட்டார்கள்.

தம் வளர்ப்புத் தந்தை காலமான பின்னர், இயேசுநாதர் சோசப் செய்துவந்த தச்சுத் தொழிலைச் செய்து வந்தார். அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, தாயும் மகனும், வாழ்ந்து வாழ்ந்தார்கள்.

இயேசுநாதருக்கு வயது முப்பது நடந்துகொண்டிருந்தது.

இது சமயம் ஜோர்தான் நதிக்கரையில் பரபரப்பான சம்பவம் ஒன்று நிகழ்ந்துகொண்டிருந்தது. ஜான் என்னும் புனிதர் ஒருவர் தோன்றி, மக்களுக்கு உபதேசம் செய்யத் தொடங்கினார்: ''இறைவனுடைய வானுலக ராச்சியம் அண்மையில் இருக்கிறது. ஆகையால் மக்களே! நன்மையைச் செய்யுங்கள்! நன்மையைச் செய்யுங்கள்! மனம் திருந்தி நல்ல முறையில் வாழ்க்கை நடத்துங்கள். திருப்புனலாட்டைச் செய்துகொண்டு, செம்மையாக வாழுங்கள்!'' என்று உபதேசம் செய்தார்.

இந்தப் புனிதர் ஒட்டக ரோமத்தால் செய்யப்பட்ட உடையை அணிந்திருந்தார். இடையில் வார்க் கச்சையைக் கட்டியிருந்தார். வெட்டுக்கிளிகளையும் காட்டுத் தேனையும் உணவாக உண்டு வாழ்க்கை நடத்தினார். அபாரமான தைரியத்துடனும் ஆற்றலுடனும் தமது பிரசாரத்தை ஜான் செய்து வந்தார். யாருக்கும் பயப்படாமல், துணிச்சலுடன் தமது கருத்துக்களை அவர் வெளியிட்டார்.

யூத மக்கள் சுமார் நானூறு ஆண்டுகளாகத் தீர்க்கதரிசி ஒருவரை எதிர்பார்த்து ஏக்கத்துடன் காத்திருந்தார்கள் என்பதையும், அவர் வந்த பின்னரே, சகல துறைகளிலும் தங்களுக்கு விமோசனம் ஏற்படக் கூடும் என்று நம்பி இருந்தார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

எனவே, ஜான் செய்த உபதேசங்கள் யூத மக்களைப் பெரிதும் கவர்ந்தன. தாங்கள் இதுவரை எதிர்பார்த்திருந்த தீர்க்கதரிசி தங்களிடம் இப்பொழுது தோன்றிவிட்டார் என்ற நம்பிக்கையுடன் ஜோர்தான் நதிக்கரையை நாடி, ஆர்வத்துடன் திரள் திரளாகப் புறப்பட்டுச் சென்றனர்.

புனிதர் ஜானைத் தரிசிப்பதற்கு ஏழை எளியவர்கள் சென்றார்கள்; பணக்காரர்கள் சென்றார்கள்; பண்டிதர்கள் சென்றார்கள்; பாமரர்கள் சென்றார்கள்; அதிகாரிகள் சென்றார்கள்; படைவீரர்கள் சென்றார்கள்; ஆடவர்கள் சென்றார்கள். பெண்கள் சென்றார்கள்.

இப்படிப் பல திறப்பட்ட மக்களும், புனிதர் ஜானிடம் புனலாட்டுப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஆர்வத்துடன் போனார்கள்.

புனலாட்டு என்பது என்ன? உள்ளமும் உடலும் பாவத்தினின்று விடுபட்டு, பரிசுத்தம் அடைந்துவிட்டதற்கு அடையாளமாகச் செய்யப்படும் ஒரு சடங்கு. உடல் முழுதும் நனையும்படி மூழ்கி நீராடுவதன் மூலமுமோ. அல்லது சிரசின் மீது நீரைத் தெளிப்பதன் மூலமோ, இந்தப் புனலாட்டுச் சடங்கை, யூதர்கள் செய்து வந்தார்கள். அந்த முறையைப் பின்பற்றி இப்பொழுது கிறிஸ்தவர்கள் செய்கிறார்கள்.

இந்தப் புராதன சம்பிரதாயத்தை அனுசரித்துத்தான், புனலாட்டைச் செய்துகொண்டு, திருந்திய வாழ்வு வாழும்படி, மக்களை, புனிதர் ஜான் அழைத்தார்.

''மக்களே! புறத்தைச் சுத்தம் செய்யும் புனலாட்டைப் பெற்றுக்கொண்டால் மட்டும் போதாது. அகமும் திருந்தி நல்லவர்களாய் நீங்கள் வாழ வேண்டும். முன்பு நீங்கள் செய்துள்ள பாவங்களை நினைந்து பச்சாதாபப்படுங்கள். இனியும் அத்தகைய பாவங்களைச் செய்யாதீர்கள்'' என்று உபதேசம் செய்தார்.

ஜான் செய்த உபதேசம், பரிசேயரையும் சதுசேயரையும் அவர்பால் ஈர்த்தது.

தாங்கள் எதிர்பார்த்திருந்த மெசியா ஒரு வேளை இவராய் இருக்கலாமோ என்று பரிசேயரும் சதுசேயரும் அனுமானித்தனர். அப்படியிருந்தால், அவரை முன்னதாகவே வசம் ஆக்கிக்கொண்டு விடுவது நலம் என்று

அவர்கள் கருதினர். ஆகவே, ஜானைச் சந்திக்கும் பொருட்டு, ஜோர்தான் நதிக்கரைக்கு அவர்கள் வந்தனர்.

தாங்கள் அபிரகாம் வழியில் வந்தவர்கள் என்ற தற்பெருமை பரிசேயர்களிடம் மிகுதியாக உண்டு. கர்வமும் பேராசையும் மிகுந்த இவர்களைப் பார்த்ததும், புனலாட்டும் ஜான் ஆத்திரத்துடன் பேசலானார்:

''விரியன் பாம்புக் குட்டிகளே! உங்கள்மீது வரப் போகும் தெய்வத்தின் தண்டனையிலிருந்து நீங்கள் தப்ப முடியுமா என்பதை நினைத்துப் பாருங்கள். இனியாவது மனம் திருந்தி, நல்ல விதமாக வாழ முயலுங்கள்; நாங்கள் அபிரகாம் வழியில் பிறந்தவர்கள் என்ற இறுமாப்பு உணர்ச்சி, இனி உங்களுக்கு வேண்டாம். இறைவன் நினைத்தால் போதும். இதோ கிடக்கும் கற்களிலிருந்தே அபிரகாமுக்கு ஏற்ற சந்ததிகளை அவர் உண்டுபண்ணிவிடுவார். நான் சொல்லுவதைச் செவிசாய்த்துக் கவனமாய்க் கேளுங்கள். மரங்களின் வேரில் இதோ கோடரி வைக்கப் பட்டிருக்கிறது. நல்ல கனிகளைக் கொடாத மரங்களை எல்லாம் வெட்டி வீழ்த்தி, நெருப்பில் போடப்படும். ஆகையால் எச்சரிக்கையாக இருங்கள்'' என்று போதனை செய்தார்.

இதைச் செவிமடுத்த ஜனங்களில் சிலர், ''அப்படியானால் இப்பொழுது நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்கள்.

''மனம் திருந்தி, ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொண்டு வாழுங்கள். இரண்டு சட்டைகள் வைத்திருப்பவன் சட்டை இல்லாதவனுக்கு ஒன்றைக் கொடுக்கட்டும். உணவு வைத்திருப்பவன் உணவு இல்லாதவனுக்கு அதைக் கொடுக்கட்டும்'' என்று பதில் சொன்னார்.

மக்களைக் கொடுமைப்படுத்தி வரி வசூலிக்கும் ஆயக் காரர் சிலர், ஜானை அணுகி, ''ஐயா! நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்கள்.

''நீதியாக நடந்து வரிவசூல் செய்யுங்கள். கட்டளையை

மீறி அதிகமாக ஒன்றும் செய்ய வேண்டாம்'' என்று கூறினர்.

போர்வீரர்கள் சிலர் முன்வந்து தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர்.

''யாரையும் பலவந்தப்படுத்தாதீர்கள். உங்களுக்குக் கிடைப்பதைக் கொண்டு திருப்தி அடையுங்கள்'' என்று உபதேசித்தார்.

தன்னலம் ஒருசிறிதும் இன்றி, இப்படித் துணிச்சலோடும், ஊக்கத்தோடும் உபதேசம் செய்யும் ஜானுடைய புகழ்,'நாடு முழுவதிலும் பரவத் தொடங்கிற்று. தாங்கள் எதிர்பார்த்திருந்த மீட்பர் இவர்தானோ என்ற ஐயம் மக்களிடையே ஏற்படலாயிற்று. ஜானிடம் காணப்பட்ட மனோதிடம், தவ வாழ்க்கை, அவர் செய்த உபதேசம், ஆகியன இவ்வாறு மக்களை எண்ணும்படி செய்தன. ஆகவே, யூதப் பெரியோர் சிலர் அவரை அணுகி, ''ஐயா! தாங்கள் யார்? நாங்கள் எதிர்பார்த்து இருக்கும் மீட்பர் தாங்கள் தானா?'' என்று கேட்டனர்.

''நான் மீட்பர் அல்லேன்!'' என்று ஜான் அழுத்தமாகப் பதில் சொன்னர்.

''அப்படியானல் தாங்கள் யார்?'' என்று கேட்டனர் யூத குலப் பெரியோர்.

''வரவிருக்கும் மீட்பருக்கு முன்னோடியாக வந்திருப்பவன் நான்; மீட்பர் செல்வதற்கு ஏற்ற வழியை வகுப்பதற்காக இறைவனால் அனுப்பப்பட்டவன் நான்; அதற்காகப் பாலை வெளியில் நின்று மக்களைக் கூவி அழைப்பவன் நான்'' என்று பதில் சொன்னர் ஜான்.

''நீர் மீட்பரும் அல்ல; தீர்க்கதரிசியும் அல்ல வென்றால், பின்னை, எதற்காக மக்களுக்கு நீர் திருப்புனலாட்டுச் செய்து வைக்கிறீர்?'' என்று யூதர்கள் கேட்டார்கள்.

''வெறும் தண்ணீரால் உங்களை நான் புனிதப் படுத்துகிறேன்; எனக்குப் பின் வருபவரோ பரிசுத்த ஆவியாலும் நெருப்பாலும் ஞான ஸ்நானம் கொடுத்து

உங்களைப் புனிதப்படுத்துவார்; அவர் என்னைக் காட்டிலும் எவ்வளவோ மேலானவர்; அவர் அணிந்திருக்கும் மிதியடிகளின் வாரை அவிழ்விப்பதற்குக்கூட எனக்கு அருகதை போதாது'' என்று பதில் சொன்னார் ஜான்.

இயேசுவின் புனலாட்டு

முன்னோடி தம் காரியங்களை இவ்வாறு ஜோர்தான் நதிக்கரையில் செய்துகொண்டிருந்தபோது, இயேசு நாசரத்திலிருந்து புறப்பட்டு, ஜான் திருப்புனலாட்டுச் செய்துகொண்டிருக்கும் ஜோர்தான் நதிக் கரைக்குப் போனார். கூட்டத்தோடு கூட்டமாகச் சேர்ந்து சென்று, புனலாட்டைப் பெறும் பொருட்டு, ஜான் முன்னிலையில் போய் நின்றார்.

ஜானும் இயேசுநாதரும் உறவினர்கள்தாம்; என்றாலும், இதுவரை, ஒருவரை ஒருவர் சந்தித்தது இல்லை.

ஜான் என்னும் இந்த முனிவர், அயின் கரீமில் வாழ்ந்த எலிசபெத் என்னும் அம்மையாரின் புதல்வர் ஆவர். இவருடைய தாய் எலிசபெத்தும், இயேசுவின் அன்னை மேரியும் ஒன்றுவிட்ட சகோதரிகள் ஆவர்.

இளம் பிராயத்திலேயே, ஜான் ஜெருசலம் பக்கத்தில் இருக்கும் ஒரு காட்டுக்குத் தவம் செய்யப் போய்விட்டார். அவருடைய தந்தை சக்ரியாவும், அன்னை எலிசபெத்தும் காலமாகிவிட்டார்கள். அதனால் எவ்வித தடங்கலும் இல்லாது, ஜான் தவ வாழ்க்கையில் ஈடுபட்டார். ஆண்டுகள் பல தொடர்ந்து தவ வாழ்வை மேற்கொண்ட பின்னர், காட்டைவிட்டு வெளிப் போந்து உபதேசம் செய்யத் தொடங்கினார்

தமக்குப் பின் மேலான மெசியா ஒருவர் வரப்போகிறார் என்பது ஜானுக்கு நிச்சயமாகத் தெரிந்து இருந்தும், அந்த மெசியா இப்பொழுது தம் முன்னே நிற்கிறார் என்பதை,

ஜானல், முதலில் தெரிந்துகொள்ள முடியவில்லை.

ஆயினும், புனலாட்டுப் பெறும் பொருட்டு இயேசுநாதர் அவர் முன்னே போய் நின்றதும், ஏதோ ஒரு உள்ளுணர்வின் பயனாய் வந்திருப்பவர் மீட்பராய் இருக்கலாம் என்ற எண்ணம் ஜானுக்கு உண்டாயிற்று. தன் தாய் எலிசபெத் வயிற்றில் தான் கருவாய் இருக்கும்பொழுதே, மேரியின் திரு வயிற்றில் வளரும் இயேசுவை அறிந்து, தன் தாய் வயிற்றினுள்ளே துள்ளிக் குதித்து மகிழ்ச்சியைத் தெரிவித் கொண்டவ ரல்லவா இந்த ஜான்!

இப்பொழுது நேருக்கு நேரா அந்தத் திருக் குமாரனைப் பார்த்ததும், இவர்தான் இதுவரை மக்கள் எதிர்பார்த்த மெசியாவாய் இருக்கக் கூடும் என்று ஜான் கருதினார். ஆகவே, புனலாட்டுப் பெறும் பொருட்டு இயேசுநாதர் தம் முன்னே வந்து நின்றதும், ஜான் தயக்கத்துடன் பேசலானார்:

''நான் அன்றோ தங்களிடம் புனலாட்டுப் பெற வேண்டி வன்? அப்படி இருக்கும்பொழுது, புனலாட்டுப் பெறும் பொருட்டு தாங்கள் என் முன்னே வந்து நிற்பது பொருந் துமா?'' என்று கேட்டார்.

ஏனென்றால் பாவம் செய்தோருக்குத்தான் புனலாட்டுச் சடங்கு அவசியம். பாவம் செய்யாதோருக்கு அந்தச் சடங்கு அவசியம் இல்லை என்பதை ஜான் அறிந்தவர்! அதனால்தான் எவ்வித பாவமும் செய்யாத இயேசுநாதரிடம் மேலே குறிப்பிட்டபடி ஜான் கேட்டார்.

இப்படி ஜான் கேட்டதும், இயேசுநாதர் அவரை நோக்கி, ''இப்பொழுது தடை ஒன்றும் செய்ய வேண்டாம். இப்படி நடைபெற வேண்டும் என்றிருக்கிறது'' என்று கூறினார்.

இவ்வாறு கூறிவிட்டு, இயேசுநாதர் ஜோர்தான் ஆற்றில் இறங்கி நின்றார்.

ஜானும் முறைப்படி புனலாட்டுச் சடங்கை இயேசுநாத ருக்குச் செய்து முடித்தார். நீரால் நனைந்த உடலோடு இயேசுநாதர் நின்றுகொண்டு இருந்தார்.

இது சமயம் திடீரென வானம் திறப்பதையும், கடவுளுடைய தூய ஆவியானது புறா வடிவில் புறப்பட்டு வருவதையும் ஜான் பார்த்தார்.



அப்போது வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது: ''என் அன்பு மகன் இவர்தான்; இவரை நான் பெரிதும் நேசிக்கிறேன்'' என்று அந்தக் குரல கூறிற்று.

இதன் பின்னர், ஜானிடம் விடை பெற்றுக் கொண்டு, இயேசுநாதர் காட்டுக்குள் போய் விட்டார்.

முன்னோடியின் முடிவு

இயேசுநாதருக்கு ஞான ஸ்நானம் கொடுத்த பின்பு, அத்துடன் நிறுத்திவிடாமல், மேலும் தொடர்ந்து அந்தப் பணியை ஜான் செய்து வந்தார். அதனால் அவருடைய புகழும் பெருமையும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தன.

இது சமயம் ஏரோது ஆந்திப்பாஸ் என்பவன் கலிலேயாப் பகுதிக்கு அரசனாக இருந்தான். தன் தந்தையைப் போலவே, இவனும் கொடியவன்; தீய நடத்தையுள்ளவன்.

இவன் சகோதரன் பிலிப்பு என்பவன் ரோம் நகரில் இருந்தான். இவனுக்கு ஏரோதியாள் என்று ஒரு மனைவி இருந்தாள். ஒரு முறை ரோம் நகருக்குச் சென்றிருந்த போது, அங்கே தன் சகோதரன் பிலிப்பின் மாளிகையில்

ஆந்திப்பாஸ் விருந்தினனாகத் தங்கினான். அப்போது ஆந்திப்பாஸுக்கும் அவன் மனைவி ஏரோதியாளுக்கும் கள்ள நட்பு உண்டாயிற்று. அதன் பயனாய், இருவரும் ரோம் நகரிலிருந்து புறப்பட்டு, கலிலேயாவுக்கு வந்துவிட்டார்கள்.

தன் பொல்லாத கணவன், அவன் சகோதரன் மனைவியுடன் கள்ள நட்புக்கொண்டிருக்கிறான் என்பதும், அவன் அவளை அழைத்துக்கொண்டு கலிலேயாவுக்கு வரப் போகிறான் என்பதும் எப்படியோ தெரிய வந்து, ஆந்திப்பாஸுனுடைய முதல் மனைவி, பயந்து போய் தன் தந்தையின் ஊருக்கு ஓடிப்போய்விட்டாள்.

தான் கலிலேயாவுக்கு வரும்போது தன் முதல் கணவன் பிலிப்புக்குப் பிறந்த புதல்வி சலோம் என்பவளையும், ஏரோதியாள் தன்னுடன் இழுத்துக்கொண்டு வந்து விட்டாள்.

இந்த சலோம் நாட்டியக் கலையில் வல்லவள்.

நாணத்தைத் துறந்து, ஆந்திப்பாஸும் ஏரோதியாளும் வெளிப்படையாகவே கணவனும் மனைவியும்போல வசிக்கத் தொடங்கினார்கள்.

தங்கள் அரசனின் கௌரவக் குறைவான இந்த நடத்தை நாட்டு மக்களுக்கும் நகர மாந்தருக்கும் பிடிக்கவில்லை. அவனையும் அவனுடைய புதிய மனைவியையும் அவர்கள் மனப்பூர்வமாக வெறுத்தபோதிலும், வெளிப்படையாகத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க அஞ்சினார்கள்.

இது சமயம் திபேரியாவுக்கு, அருகே இருக்கும் அயினோன் என்னும் இடத்தில், ஜான் முனிவர் உபதேசம் செய்துகொண்டிருந்தார்.

ஜான் முனிவரைப் பார்ப்பதற்கும் அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்கும், அரசன் ஆந்திப்பாஸ் விரும்பினான். தமது அரண்மனைக்கு வந்து சபையோர் முன்னே உபதேசிக்குமாறு வேண்டினான்.

ஆந்திப்பாஸின் விருப்பத்துக்கு இசைந்து, ஜான் முனிவர் அரண்மனைக்குச் சென்றார்.

அப்போது அரசன் ஆந்திப்பாஸ் அரியாசனத்தில்

வீற்றிருந்தான். அவனுக்குப் பக்கத்திலேயே அவனுடைய புதிய மனைவி ஏரோதியாள் உட்கார்ந்து இருந்தாள்.

சபையில் அமைச்சர்களும் அதிகாரிகளும் பிரமுகர்களும் இருந்தார்கள்.

ஜான், தான் செய்ய விரும்பிய உபதேசத்தைச் சபையினருக்குச் செய்தார். அரசன் என்றும் ஆண்டி என்றும் வேற்றுமை பாராட்டாது, அனைவரிடமும் தைரியமாக உண்மையை எடுத்துக் கூறும் இயல்பு, ஜான் முனிவரிடம் எப்பொழுதுமே உண்டு.

அரசனுக்குப் பக்கத்தில் ஒய்யாரமாக உட்கார்ந்திருக்கும் பெண் அரசனுடைய சொந்த மனைவி அல்லள் என்பது ஜான் முனிவருக்குத் தெரியும். ஆகவே, அரசனை நோக்கி, ''அரசே! உமக்கு அருகே உட்கார்ந்திருப்பவள் உம் மனைவி அல்லவே! உம் சகோதரன் மனைவியை அழைத்து வந்து, நீர் உம் அருகே வைத்துக்கொண்டிருப்பது முறையா? அநியாயமான இந்தக் காரியத்தை அரசனா நீர் செய்யலாமா? இவளுடைய கணவனிடம் இவளை நீர் அனுப்பிவிடும்'' என்று தைரியமாகக் கூறினார்.

பலர் முன்னிலையில் தன்னை இவ்வாறு ஜான் முனிவர் அவமானப்படுத்திவிட்டதை நினைத்து, ஏரோதியாள் அதிக ஆத்திரம் அடைந்தாள். ''இந்தக் காட்டுமிராண்டி எம்மாத்திரம்! சபையிலே என்னை அவமானப்படுத்திய இவன் உயிரை வாங்காவிட்டால் நான் ஏரோதியாள் ஆகேன்'' என்று தனக்குத் தானே ஏரோதியாள் ஒரு முடிவு செய்து கொண்டாள்.

அதிக புகழுடனும் பெருமையுடனும் விளங்கும் ஜான் முனிவரை உடனே அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து, ஏரோதியாள் காத்திருந்தாள்.

அரசன் ஆந்திப்பாஸோ, இடுக்கியில் அகப்பட்ட எலிபோல, எதுவும் செய்ய முடியாது தத்தளித்தான். தீர்க்கதரிசி என மக்கள் கொண்டாடும் ஜான் முனிவரைத் தண்டித்தால், மக்கள் கலகம் செய்தாலும் செய்யக் கூடும்;

தண்டியாது விட்டுவிட்டால் தன் மனைவி ஏரோதியாள் தன்னை விட்டு ஓடிப் போய்விடுவாள். என் செய்வது? ஒன்றும் புரியவில்லையே? என்று கலக்கமுற்றுத் தவித்தான். பிறகு ஒரு முடிவுக்கு வந்து, ஜான் முனிவரைப் பிடித்துக் காவலில் வைத்தான்.

மக்கீரஸ் என்னும் அரண்மனையில் ஜான் முனிவரை, ஆந்திப்பாஸ் காவலில் வைத்திருந்தான். பத்து மாதங்கள் வரை ஜான் முனிவர் சிறையில் இருந்ததாகச் சொல்லு கிறார்கள். அவரை அரசன் ஆந்திப்பாஸ் அன்போடு நடத் தினன் என்றும், மற்றவர்கள் வந்து சந்தித்துப் பேச அனுமதி அளித்தான் என்றும் தெரியவருகிறது. மனைவியைத் திருப் திப்படுத்த வேண்டியே, ஜான் முனிவரை அவன் காவலில் வைத்தான்.

பத்து மாதங்களுக்குப் பின்னர், ஆந்திப்பாஸின் பிறந்த நாள் வந்தது. அதை விமரிசையாகக் கொண்டாடும் பொருட்டு, மக்கீரஸ் அரண்மனையில் கோலாகலமாக ஏற்பாடுகள் செய்திருந்தார்கள்.

பிறந்த நாள் அன்று, விருந்தும் களியாட்டமும் வெகு விமரிசையாக நடைபெற்றன. ''அரசர் நீடுழி வாழ்க!'' என்று விழாவுக்கு வந்திருந்தவர்கள் அரசனை வாழ்த் தினர்கள்.

அரசன் ஆந்திப்பாஸையும் சபையினரையும் மகிழ் விக்கும் பொருட்டு, ஏரோதியாளின் புதல்வி, சலோம் என்பவள் சபைக்கு வந்து, வெகு திறமையாக நடனம் ஆடினள்.

''சபாஷ்! சபாஷ்!'' என்று சொல்லி, சபையில் இருந்த வர்கள் சலோமைப் பெரிதும் பாராட்டினர்கள். அரசன் ஆந்திப்பாஸும் மகிழ்ச்சியால் பூரித்துப்போனன். ஆகவே, அவன் சலோமை நோக்கி, ''பெண்ணே! எது விருப்பமோ என்னிடம் கேள்; அட்டி சொல்லாமல் தருகிறேன். எனது ராச்சியத்தில் பாதியை நீ கேட்டாலும், அதை உனக்குத் தர நான் சித்தமாய் இருக்கிறேன்'' என்று தன்னை மறந்து கூறினன்.

மன்னன் இவ்வாறு கூறியதும் சலோம் தன் தாய் ஏரோதியாளிடம் போனாள். அவள் ஆலோசனையைக் கேட்டுக்கொண்டு அரசனிடம் திரும்பி, ''அரசே! ஜானின் தலையை ஒரு தட்டில் வைத்து எனக்குத் தந்தால் போதும்'' என்று கூறினாள்.

இந்த விருப்பத்தைக் கேட்டதும் அரசன் ஆந்திப்பாஸ் முதலில் துணுக்குற்றான். சபையில் ஒரு பெண்ணுக்குத் தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால், அது பெருத்த அவமானத்தில் முடியும் என்று அரசன் ஆந்திப்பாஸ் அஞ்சினான்.

ஆகவே, ஜான் முனிவருடைய தலையைத் துண்டித்து எடுத்து, அதை ஒரு தாம்பாளத்தில் வைத்து, சலோமிடம் கொடுக்கும்படி உத்தரவிட்டான் ஆந்திப்பாஸ்.

அதன்படி சிப்பந்திகள் இருவர் சிறைக்குச் சென்று, ஜான் முனிவருடைய தலையைத் துண்டித்து, அதை ஒரு தாம்பாளத்தில் வைத்து எடுத்து வந்து, நடனக்காரி சலோமிடம் கொடுத்தார்கள்.

அதை அவள் தன் தாய் ஏரோதியாளிடம் எடுத்துப் போனாள்.

இருவரும் அந்த முகத்தைப் பார்த்தார்கள். ''இவளை உன் மனைவியாக நீ வைத்துக்கொண் டிருப்பது குற்றமாகும். ஆகையால், இவளை அவள் கணவனிடம் நீ அனுப்பிவிடு'' என்று மீண்டும் அந்த வாய் கூறுவதுபோல அவர்களுக்குத் தோன்றிற்று. கண்களின் பார்வை ஏரோதியாளின் இதயத்தை ஊடுருவிப் பார்ப்பதுபோல் இருந்தது.

கல் நெஞ்சம் படைத்த ஏரோதியாள் ஜான் முனிவரின் முகத்தைப் பார்த்துக் களிப்படைந்தாளா? அல்லது கலக்க மடைந்தாளா?

இதுபற்றி நமக்கு ஒன்றும் தெரியாது.

ஆனால், ஒன்று மட்டும் நமக்குத் தெரிகிறது. ஒரு காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டும் என்று பெண்கள் துணிந்து முனைந்துவிட்டால், அதை எப்படியும் அவர்கள் சாதித்துக்கொண்டுவிடுவார்கள் என்பதை ஏரோதியாளின்

நடத்தையிலிருந்து நாம் தெரிந்துகொள்ள முடிகிறது.

உண்மையை எடுத்துச் சொல்பவர்கள் உயர்வு அடையலாம்; மேன்மை அடையலாம்; ஆயினும் அவர்கள் உயிருக்கு எப்பொழுதும் ஆபத்து இருந்துகொண்டே இருக்கும் என்பதற்கு ஜான் முனிவரின் வாழ்க்கை நமக்கு ஒரு சான்ருக விளங்குகிறது.

இயேசுநாதர்

வாழ்க்கை வரலாறு

∴

வெளிப்படுத்திக்கொண்ட காலம்

∵

இறுதி மூன்று ஆண்டுகள்

(முதலாம் ஆண்டு)

இயேசுநாதர்

(வாழ்க்கை வரலாறு)

மூன்று ஆசைகள்

திருப்புனலாட்டைப் பெற்றுக்கொண்ட பின்பு, புனித ஆவியின் ஏவுதலால், இயேசுநாதர், ஒரு வனப் பிரதேசத்துக்குப் போனார். அந்தப் பிரதேசம் கல்லும் முள்ளும் நிறைந்த பிரதேசம்; கொடிய விலங்குகள் சஞ்சரிக்கும் பிரதேசம்; சிறு சிறு குன்றுகளும் குகைகளும் அந்தப் பிரதேசத்தில் உண்டு.

வரட்சியும் வெப்பமு முள்ள அந்தப் பிரதேசத்தை அடைந்த இயேசுநாதர், தொடர்ந்து நாற்பது நாட்கள் இரவும் பகலும் உண்ணு நோன்பு இருந்தார். உணவு உட்கொள்ளாமலும் நீர் பருகாமலும் இருந்து, கடும் தவம் புரிந்தார்.

தொன்று தொட்டே யூதர்கள் நாற்பது நாட்கள் நோன்பு இருக்கும் வழக்கத்தைக் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். மோசஸ் என்னும் தீர்க்கதரிசியும் திர்க்கதரிசி எலியாவும், முன்பு இதேபோல, நாற்பது நாள் உண்ணு நோன்பு நோற்று இருக்கிறார்கள்.

இந்த மரபை அனுசரித்துத்தான், இயேசுநாதரும் நாற்பது நாட்கள் உண்ணு நோன்பு இருந்து தவம் புரியலானார்.

பசி என்னும் உணர்வை அடக்கிக் கட்டுப்படுத்திக் கொண்டு இயேசுநாதர் உண்ணு நோன்பு இருந்தாரா? அல்லது பசி என்னும் உணர்வு ஏற்படாமலே, அந்த நாற்பது நாட்களிலும் இயேசுநாதர் தியானத்தில் ஆழ்ந்து இருந்தாரா?

நாற்பது நாட்கள் இரவும் பகலும் உபவாசம் இருந்த பின்னர் இயேசுநாதருக்குப் பசி உண்டாயிற்று.

மத்தே...4 : 2

என்று பைபிளில் இருக்கும் புதிய ஏற்பாடு கூறுகிறது.

நாற்பது நாட்கள் நோன்பு இருந்து தவம் இயற்றிய பின்னர், வெளிப் போந்து, இயேசுநாதர் பொது வாழ்வில் ஈடுபடப் போகிறார்.

பொது வாழ்வில் ஈடுபட்டு, உண்மையாகவே தொண்டு செய்ய விரும்புவோருக்கு மூன்று ஆசைகள் இருத்தல் கூடாது.

1. உணவு ஆசை.
2. புகழ் ஆசை.
3. பதவிஆசை.

இந்த மூன்று ஆசைகளுக்கும் இடம் கொடாதவரே, தொண்டு செய்யத்தக்கவர் என்றும், அப்பொழுதுதான் மக்களை நல்வழியில் செலுத்த அவரால் முடியும் என்றும், அரிய பெரிய அனுபவ உண்மை ஒன்றைப் பைபிள் நயமாக எடுத்துக் காட்டுகிறது.

இந்த மூன்று ஆசைகளையும், தமது பொது வாழ்வின் தொடக்கத்திலேயே, இயேசுநாதர் அகற்றிவிட்டார் என்றும், அதன் பின்னர்தான், பொது வாழ்வில் அவர் ஈடுபடத் தொடங்கினார் என்றும் பைபிள் கூறுகிறது. அது எப்படி என்று பார்ப்போம்.

பசி, புகழ், பதவி, இந்த மூன்றுக்கும் வயப்படாதவர்கள் உலகில் அரிது என்று துணிந்து கூறலாம்.

இந்த மூன்றில் பசி என்பதைப்பற்றி முதலில் கவனிப் போம்.

பசி என்பது வயிற்றுப் பசியை மட்டும் குறிக்கவில்லை; சிற்றின்பப் பசியையும் சேர்த்துக் குறிக்கிறது என்று இங்கு நாம் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

பசியை ஆற்றிக்கொள்வதற்காக மனிதன் என்ன என்ன காரியங்களை எல்லாம் செய்வான் என்பதை அடியில் வரும் தமிழ்ப் பாடல் அழகாகவும் கச்சிதமாகவும் விவரிக்கிறது;

ஆடுவதும் பாடுவதும்
ஆளடிமை செய்கிறதும்
ஓடுவதும் சாடுவதும்—ஞானத் தங்கமே
ஒருசாண் வயிற்றுக்கடி.

மக்கள் ஆடுகிறுர்கள்; பாடுகிறுர்கள்; வேலேக்காரர்கள் வைத்துக்கொள்கிறுர்கள்; அங்கும் இங்கும் ஓடிப் பணம் தேடுகிறுர்கள். அதன் பொருட்டு ஒருவரோடு ஒருவர் சண்டை பிடித்துககொள்கிறுர்கள். இதெல்லாம் எதற்கு? தனக்குள்ள ஒரு சாண் வயிற்றை நிரப்பும் பொருட்டுத் தான் என்று கூறுகிறது இந்தப் பாடல்.

பசி என்பது உயிர் இனங்களிடையே காணப்படும் ஓர் இயற்கை நியதி. இந்த நியதியைக் குற்றமுள்ளது என்று நாம் கூற முடியாது. ஆயினும், அறிவுபடைத்த மனிதன் இந்த நியதிக்கு அடிமைப்பட்டு, விலங்கினங்களேப்போல உணவுக்காக மட்டும் உயிர் வாழக் கூடாது. உணவுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் மனிதனுல் உயர்ந்த காரியங் களேச் சாதிக்க முடியாது.

இந்த அரிய பெரிய உண்மையை, இயேசுநாதரின் வாழ்க் கையில் நடந்த முதற் சோதனே மூலம் நாம் தெரிந்து கொள்கிருேம்.

நல்ல காரியங்களேச் செய்வது கடவுளுக்கு விருப்ப மானது; தீய காரியங்களேச் செய்வது கடவுளுக்கு விரோத மானது. இது, கடவுளே ஒப்புக் கொள்கிற சமயத்தவர் அனேவரும் ஒப்புக்கொண்டுள்ள ஓர் உண்மை.

நல்ல காரியங்களே ஒருவர் செய்யப் புகுந்தால், ஆசை காட்டி மயக்கி, அவரைக் கெடுக்க,கடவுளுக்கு விரோதமான தீயசக்திகள் முனேவது உண்டு. இப்படி முனேயும் தீயசக்தி களே, சாத்தான் என்றும், பேய்கள் என்றும், கிறிஸ்தவ சமயத்தினர் குறிப்பிடுகிறுர்கள்.

நாற்பது நாள் உண்ணு நோன்பிற்குப் பிறகு, இயேசு நாதர் வெளியே வந்தார். அப்போது அவருக்குப் பசி எடுக்க ஆரம்பித்தது. சோர்வுற்றுக் களேப்போடு வந்து,

ஓர் இடத்தில் அவர் அமர்ந்தார். அவர் அமர்ந்திருந்த கற்பாறையைச் சுற்றிலும் அப்பங்களைப்போல் வடிவமுள்ள கருங் கற்கள் நிறையக் கிடந்தன.

இதுதான் தக்க தருணம் என்று கருதி, சாத்தான், இயேசுநாதர் முன்னர்த் தோன்றினன். அவன் இயேசுநாதரை அணுகி,

"நீர் கடவுளுடைய புதல்வனாயின், இதோ கிடக்கும் கற்களை அப்பங்களாக மாற்றும் பார்க்கலாம்"

மத் 4 : 3

என்று சொல்லி ஆசைகாட்டினன்.

''அப்படிச் செய்தால் உம்மை வாட்டும் பசியை நீர் தீர்த்துக்கொள்ள அது உதவும்'' என்று சாத்தான் சாடையாக உணர்த்தினன்.

அதற்கு இயேசுநாதர் சாத்தானை நோக்கி,

"மனிதன் அப்பத்தினால் மட்டும் உயிர் வாழ்வது இல்லை. இறைவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு சொல்லும் அவனை வாழ வைக்கிறது"

மத் 4: 4

என்னும் வேத வாக்கியத்தின் மூலம் பதில் சொன்னார்.

இயேசுநாதர் சொன்ன இந்தப் பதிலிலிருந்து மாபெரும் உண்மை ஒன்றை நாம் நினைவில்கொள்வது அவசியமாகும்.

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு தேவைதான். ஆயினும், வயிறு நிறைய உணவு கிடைப்பதனால் மட்டும் மனித வாழ்வு உயர்வடைந்து விடாது; நிறைவு அடைந்து விடாது. வயிறு புடைக்க உண்டு வாழ்நாளைக் கழிப்பது விலங்குகள் கடைப்பிடிக்கும் வாழ்க்கை முறை யாகும். ஆகவே, உணவுக்காக மட்டும் அன்றி, இன்னும் உயர்ந்த, தன்னையும் மற்றவர்களையும் மேன்மைப்படுத்தக் கூடிய வழிகளில் தம் வாழ்நாளைச் செலவிட மனிதன் முயல வேண்டும். சாப்பாட்டை மட்டும் குறிக்கோளாக வைத்துக்கொண்டு, அதற்காக மட்டும் மனித சமுதாயம் பாடுபடுமேயானல், அது சாப்பாட்டுச் சமுதாயமாக இருக்குமே யன்றி, சன்மார்க்க சமுதாயமாக இருக்க முடியாது. மனிதன் மேன்மை அடையச் சாப்பாடு மட்டும் போதாது. இறைவனுடைய விருப்பத்துக்கு இயைய வாழவும், மனிதன் தெரிந்துகொள்ள

வேண்டும். ''அப்பத்தினுல் மட்டும் மனிதன் உயிர் வாழ்வது இல்லை'' என்று சாத்தானுக்குப் பதில் சொன்னதன் மூலம், மனித சமுதாயத்துக்கும் இந்த உண்மையை இயேசுநாதர் நினைவுபடுத்துகிருர். இதை எப்பொழுதும் நினைவில் பதிய வைத்துக்கொண்டு, வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகி, மனிதகுலம் மேன்மையடைய ஆண்டவன் அருள்புரிவாஞக!

தான் செய்த முதற் சோதனையில் வெற்றி காணுது போகவே, சாத்தான் வேறு ஒரு சோதனையை இயேசுநாதரிடம் கையாண்டு பார்த்தான்.

புகழுக்கும், பெருமைக்கும் ஆசைப்படாத மனிதர் யாரும் இல்லை. பசியையும் தாகத்தையும் மறந்து, புகழையும் பெருமையையும் தேடித் திரியும் அரசியல்வாதிகள் நிறையப் பேர் உண்டு. ஆகவே, புகழ் என்னும் வலையில் சிக்க வைத்து, இயேசுநாதரின் மனத்தைத் திருப்ப முயன்ருன் சாத்தான்.

மானுட இயல்புக்கு அப்பாற்பட்ட அதிசயம் எதையும் மனிதர் செய்வாராயின், அந்த மனிதருக்கு அதனுல் உடனே பெருமை உண்டாகும் அதைத் தொடர்ந்து புகழும் உண்டாகும்.

அத்தகைய ஒரு புதுமையைச் செய்யும்படி இயேசுநாதருக்கு ஆசைகாட்டினுன் சாத்தான். ஒரு நொடியில் இயேசுநாதரைக் கோயிலின் முகட்டுக்குத் தூக்கிப் போய் நிறுத்தி, ''கீழே குதியுங்கள்!'' என்று கூறினுன். ''இப்படி நீர் செய்தால் உமக்குப் பெருமையும் உண்டாகும். புகழும் உண்டாகும்'' என்று சொன்னுன்: தன் கூற்றுக்குச் சான்ருக, வேதத்திலிருந்தே ஒரு மேற்கோளையும் சாத்தான் இயேசுநாதருக்கு எடுத்துக்காட்டினுன்:

> ''உம்மைக் காக்கும்படி இறைவன் தம் தூதர்களுக்குக் கட்டளையிடுவார்:
>
> ஆகையால், உமது கால்கள் கல்லில் மோதிக்கொள்ளாதபடி,
> தேவ தூதர்கள் தமது கைகளால் உம்மைத் தாங்கிக்கொள்வார்கள்."
>
> மத்: 4, 6.

இப்படிச் சாத்தான் கூறியதும், இயேசுநாதர் அவனை நோக்கி, ''இறைவனைச் சோதித்துப் பார்க்கலாகாது என்றும் வேதம் கூறுகிறது'' என்று எடுத்துக் கூறினார்.

இந்த இடத்தில் ஒரு விஷயத்தை நாம் நினைவில் வைத்துக்கொள்வது நல்லது.

இயேசுநாதர் தம் வாழ்க்கையில் இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், எத்தனையோ அதிசயங்களைச் செய்து இருக்கிறார். அத்தகைய ஒருவர் இப்பொழுது இந்த அதிசயத்தைச் செய்ய மறுப்பானேன்?

இது ஒரு நியாயமான கேள்விதான். இரண்டுக்கு முள்ள வேறுபாட்டை வாசகர்கள் அறிவது அவசியம். பின்பு இயேசுநாதர் செய்யப் போகும் அதிசயங்கள் அனைத்தும், மற்ற மக்களின் நன்மையை உத்தேசித்துச் செய்யப்பட்ட அதிசயங்கள் ஆகும்.

ஆனால், இப்பொழுது சாத்தான் இயேசுநாதரைச் செய்யும்படி தூண்டும் அதிசயமோ, புகழையும் தற்பெருமையையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

இந்த நிகழ்ச்சியிலிருந்து மற்றும் ஒரு பேருண்மையை நாம் தெரிந்துகொள்கிறோம்.

பொது வாழ்க்கையில் ஈடுபடுவோர், புகழுக்காகவும் பெருமைக்காகவும் காரியங்களைச் செய்தல் கூடாது. தன்னலம் சிறிதும் இன்றி, பிறருக்கு நன்மை பயக்கும் காரியங்களை மட்டுமே மனமுவந்து செய்ய வேண்டும். புகழைத் தேடி, பெருமையைத் தேடி எவன் அலைந்து திரிகிறானோ, அவனால் பிறருக்கு நன்மை பயக்கும் காரியங்களைச் செய்ய முடியாது என்னும் உண்மையை நினைவில் வைத்துக்கொண்டு, அதன்படி வாழ்வது அனைவருக்கும் நன்மை பயக்கும்.

தனது இரண்டாவது முயற்சியிலும் சாத்தான் தோல்வி அடைந்து போனான். வெறும் புகழுக்காக எந்தக் காரியத்தையும் இயேசுநாதர் செய்ய மாட்டார் என்பதைச் சாத்தான் தெரிந்துகொண்டான். ஆகவே, மற்றும் ஓர்

ஆசையைக் காட்டி, இயேசுநாதரைத் தன்பால் இழுக்க முயன்றான் சாத்தான்.

அடுத்து, உயரமான ஒரு மலையுச்சிக்கு, இயேசுநாதரைச் சாத்தான் தூக்கிப் போனான். அங்கு இருந்தபடியே உலகத்திலுள்ள நாடுகளை எல்லாம் அவருக்குக் காட்டினான். ''இந்த நாடுகள் அனைத்தையும் இறைவன் எனக்குத் தந்திருக்கிறார். என் சொற்படி நடந்து, என்னை நீர் வணங்க இசைந்தால், இந்த நாடுகள் அனைத்தையும் உமக்கு நான் தந்துவிடுகிறேன்'' என்று ஆசை காட்டினான்.

பதவி ஆசை காட்டி, தன்னை வசீகரிக்கச் சாத்தான் முயல்வதை அறிந்ததும், இயேசுநாதர் சிறிது கடுமையாகப் பேசலானார்: ''சாத்தானே! அப்பால் போ!'' என்று அவனை அதட்டினார் ''இறைவனைத் தவிர்த்து, வேறு எவரையும் வணங்குதல் கூடாது'' என்று மறை நூல் கூறுவதை எடுத்துக் காட்டினார்.



பதவி ஆசை மகா பொல்லாதது. அதில் ஒருவன் வீழ்ந்து விடுவானாயின், அதிலிருந்து எவனாலும் எளிதில் மீள முடியாது. பதவிப் பித்துப் பிடித்தவன் நன்மையைத் தீமை என்றும், தீமையை நன்மை என்றும்,புரட்டிப் புரட்டிப் பேசுவான்; அதிகாரத்தைத் தன் பிடிப்பில் வைத்துக்கொள்வதற்காகப் பொய் கூறுவான். புறங் கூறுவான். மண்ணுலக ராச்சியத்தை ஆள விரும்புவோருக்கு இத்தகைய குணங்கள் இருக்கும். அதனால்தான் இயேசுநாதர் அத்தகைய ஒரு ராச்சியத்தை அடைவதில் நாட்டம் செலுத்தவில்லை.

ஆனால், மற்றொரு ராச்சியத்தை இயேசுநாதர் விரும்பினார். அதற்கு வான் உலக ராச்சியம் என்று பெயர்.

வான் உலக ராச்சியத்தில் அன்புக்கு இடம் உண்டு; ஆனால் அதிகாரத்துக்கு இடம் இல்லை. உண்மைக்கு இடம் உண்டு; பொய்மைக்கு இடம் இல்லை. பணிவுக்கு இடம் உண்டு; பதவி மோகத்துக்கு இடம் இல்லை. தொண்டுக்கு இடம் உண்டு; ஆனால் சுயநலத்துக்கு இடம் இல்லை.

இத்தகைய வான் உலக ராச்சியத்தைத்தான் இயேசுநாதர் இந்த மண் உலகில் நிறுவ உழைத்தார். அதற்காகத் தான் தமது இன்னுயிரையும் அவர் ஈந்தார்.

''சாத்தானே! அப்பால் போ!'' என்று இயேசுநாதர் அதட்டியதும், மற்றொரு சந்தர்ப்பத்தில் பார்த்துக் கொள்ளலாம்'' என்னும் கருத்துடன் சாத்தான் அவரைவிட்டு அப்பால் போய்விட்டான் என்று, லூக்கா குறிப்பிட்டு இருக்கிறார். (4: 13)

இந்த வாசகத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ளக் கூடிய உண்மை ஒன்று உண்டு. தீய சக்திகளை ஒரு முறை சமாளித்து விட்டால் மட்டும் போதாது; சமய சந்தர்ப்பம் பார்த்து அடிக்கடி தலை தூக்கும் ஆற்றல் தீய சக்திகளுக்கு உண்டு. ஆகவே, எப்பொழுதுமே விழிப்புடன் இருந்து தீய சக்திகளை நாம் சமாளிக்க வேண்டும்.

ஆசைப் பேய்க்கு ஆளானவனின் வாழ்க்கை பாழாகி விடும். அதைச் சமாளிக்கும் ஆற்றல் பெற்றவன் ஒரு முறை அதைச் சமாளித்தால் மட்டும் போதாது; வாழ்க்கை முழுவதுமே விழிப்புடன் இருந்து அதைச் சமாளிப்பது அவசியம் ஆகும் என்னும் உண்மைதான், இயேசுநாதர் வாழ்க்கையி லிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய மூன்றாவது உண்மையாகும்.

முதல் சீடர்கள்

இயேசுநாதர் தவம்செய்துகொண் டிருந்த சமயம், ஜோர்தான் நதிக்கரையில், புனலாட்டும் ஜான் தமது பணியைத் தொடர்ந்து செய்துகொண் டிருந்தார். நாளுக்கு நாள் ஜானுடைய புகழும் செல்வாக்கும் அதிகமாகி வந்தன.

இதனுல் பரிசேயரும் சதுசேயரும் கலக்கமடைந்தார்கள். ஆகவே, ஜான் என்பவர் தாங்கள் எதிர்பார்த்து இருக்கும் மெசியாவோ * என்று அனுமானித்தார்கள். உண்மை நிலையைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு, பரிசேயரும் சதுசேயரும் அடங்கிய தூதுக் குழு ஒன்றை ஜோர்தான் நதிக் கரைக்கு அனுப்பினுர்கள்.

தூதுக் குழுவினர் வந்து, புனலாட்டும் ஜானைச் சந்தித்தார்கள்.

தான் மெசியா அல்ல வென்றும்,மெசியாவுக்கு வழியைச் செப்பனிடும் பொருட்டு, முன்னேடியாக வந்திருப்பவன் என்றும் அவர்களுக்குப் பதில் கூறினுர் ஜான்.

விவரத்தைத் தெரிந்துகொண்டு, தூதுக் குழுவினர், ஜெருசலம் திரும்பினுர்கள்.

இதற்கு அடுத்த நாள் வெள்ளிக்கிழமை. தமது நாற்பது நாள் தவத்தை முடித்துக்கொண்டு, இயேசுநாதர் அன்று தினம் ஜோர்தான் நதிக்கரைக்கு வந்தார்.

அது சமயம், ஜான் தம் சீடர்களுடனும் மற்றவர்களுடனும் ஜோர்தான் நதிக்கரையில் இருந்தார். கூட்டத்தின் நடுவே இருந்தபோதிலும், இயேசுநாதர் வருவதை, புனலாட்டும் ஜான் கவனித்துவிட்டார். உடனே, அவர் தம்மைச் சுற்றி இருந்தவர்களை நோக்கி, ''இதோ பாருங்கள், தேவ ஆட்டுக் குட்டி! உலகத்தின் பாவத்தைப் போக்க வந்திருக்கும் திருக் குமாரன்'' என்று கூறினுர்.

இயேசுநாதரை, குறிப்பாக, அவர் செய்த தியாகத்தை, குறிக்க நேரும்பொழுது ''தேவ ஆட்டுக்குட்டி'' (சர்வேஸ்வர செம்மறிப் புருவை) என்று கிறிஸ்தவ சகோதரர்கள் குறிப்

பிடுகிறுர்கள். ஏன் இப்படிக் குறிப்பிடுகிறுர்கள்? இதில் சிறப்பு ஏதேனும் உண்டா?

இதை நாம் தெரிந்துகொண்டால்தான், இயேசுநாதர் எதற்காக இந்த மண்ணுலகுக்கு வந்தார் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

ஆட்டுக்குட்டி எளிய பிராணி. பிறருக்குத் தீங்கு செய்யத் தெரியாத பிராணி. பிறர் செய்த பாவங்களுக்கு ஈடாக, கோயிலில் பலி கொடுக்கப்படும் பிராணி.



இதே போல, இயேசுநாதரும் எளியவர் — அதாவது பகட்டும் படாடோபமும் இல்லாதவர். பிறருக்குத் தீங்கு செய்யாதவர். பிறரின் நன்மைக்காகப் பலியானவர். இவற்ருேடு மட்டு மன்றி, ஆட்டுக்குட்டிக்கு இல்லாத சிறப்பான அம்சம் ஒன்று அவரிடம் இருந்தது. அது அவரிடம் காணப்பட்ட தேவ அம்சம். அதனுல்தான், இயேசுநாதரைத் ''தேவ ஆட்டுக்குட்டி!'' கிறிஸ்தவ சகோதரர்கள் குறிப்பிடுகிறுர்கள்.

அன்று தினம் இயேசுநாதர் போய்விட்டார். ஆனுல், மறு தினமும் இயேசுநாதர் ஜோர்தான் நதிக்கரைக்கு வந்தார். அன்று சனிக்கிழமை.

இப்போதும் புனலாட்டும் ஜான் முனிவர் இயேசுநாதரைப் பார்த்துவிட்டார். உடனே, அவர் தம் அருகே நிற்கும் இரு சீடர்களை நோக்கி, ,'இதோ பாருங்கள், தேவ ஆட்டுக்குட்டி!'' என்று சுட்டிக்காட்டினுர்.

இயேசுநாதரின் சிறப்பை, ஜான் முனிவர் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறுவதன் உட்கருத்தை அவருடைய சீடர் இருவரும் தெரிந்துகொண்டார்கள். உடனே, ஜான் முனிவரிடம் விடைபெற்றுக்கொண்டு, இயேசுநாதரிடம் போனுர்கள். அவர் முன்னே செல்ல, சீடர் இருவரும் அவருக்குப் பின்னே சென்றுர்கள்.

சிறிது தூரம் சென்றதும், இயேசுநாதர் திரும்பிப் பார்த்தார். தம்மைப் பின்தொடர்ந்து இருவர் வருவதை அவர் கவனித்தார். உடனே, அவர்களை நோக்கி, ''எதைத் தேடிக் கொண்டு நீங்கள் இருவரும் வருகிறீர்கள்?'' என்று கனிவுடன் கேட்டார்.

இப்படி அவர் கேட்டதும், ''போதகரே! தாங்கள் எங்கே தங்கி இருக்கிறீர்கள்?'' என்று வாஞ்சையோடு இருவரும் கேட்டார்கள்.



உடனே அதற்கு இயேசுநாதர், ''வந்து பாருங்கள்'' என்று சொல்லி, தம்முடன் வருமாறு அவர்கள் இருவரையும் அழைத்தார்.

இயேசுநாதரைத் தொடர்ந்து, இருவரும் போனார்கள். மூவரும் ஜெரிக்கோ பள்ளத்தாக்கு அருகே இருந்த ஒரு குடிசையை அடைந்தார்கள். அப்போது பிற்பகல் நான்கு மணி இருக்கும்.

அன்று முழுதும் இருவரும் அவரோடு தங்கி இருந்தார்கள். இயேசுநாதரின் நடையுடை பாவனைகள் அனைத்தும் அவர்கள் இருவரையும் பெரிதும் கவர்ந்தன. யூத மக்கள் எதிர்பார்த்து இருந்த மெசியா இவராய்த்தான் இருக்கக் கூடும் என்று அவர்கள் இருவரும் நம்பினர்.

இந்த இருவரும் கலிலேயாப் பிரதேசத்திலிருந்து வந்தவர்கள். இவர்களில் ஒருவர் பெயர் ஆண்ட்ரு. மற்றவர் பெயர் திட்டமாகத் தெரியவில்லை. ஜான் என்பவர்தான்

அவர் என்று, ஆராய்ந்து அறிந்திருக்கின்றனர். அப்போது ஜானுக்கு வயது இருபது இருக்கும். தம் சீடர்களில் ஜான் என்பவரிடம் இயேசுநாதருக்கு அலாதியான பிரியம் உண்டு என்றும் சுவிஷேச நூலிலிருந்து தெரிய வருகிறது.

இந்த இருவரில் ஆண்ட்ரு என்பவர் அதிக உற்சாகமும் ஆர்வமும் படைத்தவர். அவருக்கு, சீமோன் என்னும் பெயரில் ஒரு தமையன் இருந்தார். ஆண்ட்ரு அவரிடம் சென்று, ''புனலாட்டும் ஜான் முனிவர் கூறின மெசியாவை இன்று நாங்கள் கண்டோம். தாங்களும் வந்து அவரைப் பாருங்கள்'' என்று உற்சாகத்துடன் சொன்னார். இயேசு நாதரிடம் அவரை அழைத்துப் போனார்.

சீமோனை இயேசுநாதர் கனிவோடு பார்த்தார். ''யோனு புதல்வன் சீமோனே! இன்றுமுதல் கேபாஸ் என்ற பெயரோடு நீ விளங்குவாய்!'' என்று கூறினார்.

கேபாஸ் என்னும் அராமிக் சொல் பாறையைக் குறிக்கும். கிரேக்க மொழியில் ''பீட்டர்'' என்றால் பாறை என்று பொருள்.

மறு நாள் திங்கட்கிழமை. அன்று தினம் தம் மூன்று சீடர்களையும் அழைத்துக்கொண்டு, இயேசுநாதர் புறப்பட்டார். ஜோர்தான் நதிக்கரையிலிருந்து வடக்கு நோக்கி, கலிலேயாவை நாடிப் போனார்.

கலிலேயாவின் தென் எல்லையில் பெத்சாயிதாப் என்று ஒரு நகரம் உண்டு. தம் மூன்று சீடர்களும் தம்முடன் வர, இயேசுநாதர் அந்த ஊரை அடைந்தார்.

சீடர்கள் மூவரும் தங்கள் குருவின் சிறப்பையும் மேன்மையையும் அவர்தான் மெசியா என்பதையும் மற்றவர்களுக்கு உற்சாகத்துடன் அங்கே எடுத்துச் சொன்னார்கள்.

இந்த மூவரும் உற்சாகத்துடன் கூறியதை, பெத்சாயிதாப் நகரவாசிகளில் ஒருவர் அக்கறையுடன் கேட்டுக் கொண்டு இருந்தார். அவர் பெயர் பிலிப்பு.

பிலிப்பைப் பார்த்ததும், இயேசுநாதர் அவரிடம், ''என்னைத் தொடர்ந்து என் பின்னே வா'' என்று கூறினார்.

அவர், இயேசுநாதர் பின்னே மகிழ்ச்சியுடன் சென்ருர். சில மணி நேரத்துக்குப் பின்னர், பிலிப்பு, தன் நண்பன் நத்தானியல் என்பரைச் சந்தித்தார். அவரிடம், ''நண்பரே! மோசஸும் தீர்க்கதரிசிகளும் குறிப்பிட்டு எழுதி இருக்கும் மெசியாவை நாங்கள் கண்டோம். அவர் நாசரத்து என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். பெயர் இயேசுநாதர்'' என்று உற்சாகத்துடன் கூறினுர்.

இதை நத்தானியல் நம்பவில்லை. நாசரத்தும் அதன் சுற்றுப்புறங்களும் முரடர்கள் வாழும் பிரதேசம். பண்பாடு இல்லாத அத்தகைய பிரதேசத்தி லிருந்து நல்லோர் யாரும் பிறக்க முடியாது என்று நத்தானியல் நம்பிக்கொண்டிருந்தார். ஆகவே, அவநம்பிக்கையும் ஆச்சரியமும் ஒருங்கே கலந்த தொனியில், ''நாசரத்துக் கிராமத்திலிருந்து நன்மையும் தோன்றக் கூடுமோ?'' என்று வியப்புடன் கேட்டார்.

''நம்ப வில்லையா? அப்படியானுல் நீரே வந்து நேரில் பாரும்'' என்று நத்தானியலிடம் பிலிப்பு சொன்னுர்.

ஆகவே, இருவரும் இயேசுநாதர் இருக்கும இடத்துக்கு வந்தார்கள். அவர்கள் இருவரையும் பார்த்த இயேசுநாதர், ''கபடமில்லாத இஸ்ராயேலர் இதோ வருகிருர்!'' என்று கூறினுர்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும், நத்தானியல் வியப்படைந்து போனுர். ''என்னை எப்படி உங்களுக்குத் தெரியும்?'' என்று கேட்டார்.

''அத்தி மரத்தின்கீழ் நீ இருக்கும்போதே உன்னை எனக்குத் தெரியும்'' என்று இயேசுநாதர் மறுமொழி சொன்னுர்.

இயேசுநாதர் கூறின மறுமொழியைக் கேட்ட பின்னர், நத்தானியல் மலைத்துப் போனுர். ஏனெனில், பிலிப்பு அவரை அழைப்பதற்கு முன்பு, அத்தி மரத்தின்கீழ் நத்தானியல் அமர்ந்திருந்தார்.

ஆச்சரியமுற்ற நத்தானியல் இயேசுநாதரிடம், ''தாங்கள்தான் இறைவனின் புதல்வர்; தாங்கள்தான்

இஸ்ராயேல் நாட்டுக்கு அரசர்'' என்று கனிவோடு கூறினர்.

உடனே அதற்கு இயேசுநாதர், ''அத்தி மரத்தின் கீழ் பார்த்தேன் என்று கூறியதால் என்னை நீ நம்புகிருய். இதை விட மேன்மையான சம்பவங்களை இனி நீ காணப் போகிருய்'' என்று கூறினர்.

இந்த நத்தானியலின் செய்தியை ஜான் அப்போஸ்தலர் என்பவர் மட்டும்தான் குறிப்பிட்டு இருக்கிருர். மற்ற மூன்று அப்போஸ்தலர்களும் இவரைப்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.



நத்தானியலைப் பார்த்தலோமீயூ என்றும் சொல்லுவார்கள்.

இந்த ஐவரும்தான் இயேசுநாதரின் முதல் சீடர்கள் ஆவர். இந்த ஐவரும் புனலாட்டும் ஜானிடம் சீடர்களாக இருந்தவர்கள்.

* * *

எந்த இயக்கமும் வெற்றி பெற வேண்டுமாயின், முதன் முதலாக அந்த இயக்கத்தின் நோக்கம் நல்லதாய் இருக்க வேண்டும்; அந்த இயக்கத்துக்குக் கர்த்தராக விளங்கும் தலைவரிடம் தெய்வீக மணம் கமழும் பண்புகள் பல இருக்க வேண்டும்; மூன்ருவதாக, அந்தத் தலைவரைப் பின்பற்றக் கூடிய தகுதி வாய்ந்த நல்ல சீடர்கள் இருக்க வேண்டும்.

தலைவரும் கொள்கையும் நல்லதாய் இருந்தால்கூட, பின்பற்றும் சீடர்கள் தொடர்ந்து நல்லவர்களாய் இராது போனுல், அந்த இயக்கம் வளர்ச்சிக் குன்றிப்போய் நசித்து, நாளடைவில் மறைந்து போகும்.

இயேசுநாதர் பெற்ற வெற்றிக்கு, அவருடைய தெய்வீகத்தன்மை முதற் காரணம். எனினும், வழி வழியாக

வந்த அவருடைய சீடர்களுக்கும் அதில் கணிசமான பங்கு உண்டு என்பதை நாம் மறக்கலாகாது.

கல்யாண வீட்டில்

தவ நாட்கள் முடிந்த பின்னர், இயேசுநாதர் செய்த முதற் காரியம், தாம் செய்ய விருக்கும் பொதுப் பணியில் தமக்குத் துணை செய்யும் பொருட்டு, தகுந்த சீடர்களைத் தேர்ந்து எடுத்துக்கொண்ட தாகும்.

முதலில் சேர்ந்த ஐந்து சீடர்களையும் அழைத்துக் கொண்டு, இயேசுநாதர் புறப்பட்டார். போகும் வழியில் கானு என்று ஒரு சிற்றூர் இருந்தது. அந்த ஊரில் ஒரு திருமணம் நடக்க இருந்தது.

மணப்பெண் இயேசுநாதரின் தாயார் மேரிக்கு ஏதோ ஒரு உறவு. ஆகவே, அந்தத் திருமணத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு, இரண்டு நாட்கள் முன்னதாகவே அங்கு மேரி வந்திருந்தாள்.

கடைசியில், சீடராகச் சேர்ந்த நத்தானியல் என்பவர், கானுவைச் சேர்ந்தவர். அவர் இயேசுநாதரையும் மற்ற சீடர்களையும் கானுவில் நடக்கும் திருமணத்துக்கு அழைத்தார்.

ஆகவே, எல்லாரும் அந்தத் திருமணத்துக்குச் சென்றார்கள்.

யூதர்கள், பொதுவாக, திருமணத்தை வெகு விமரிசையாக நடத்துவார்கள். எவ்விதக் குறைவும் இன்றி விருந்தினர்களை உபசரிக்க வேண்டும். விருந்தில் சிறிது குறைவு நேர்ந்தாலும் அதைப் பெருத்த அவமானம் என்று நினைப்பார்கள்.

இயேசுநாதரின் அன்னை மேரி, கானுவில் நடக்கும் இந்தக் கல்யாணத்தில் அக்கறையோடு பங்குகொண்டு அனைத்தையும் கவனித்தாள்.

யூதர்களின் திருமணத்தில், விருந்தின்போது, திராட்சை

ரசம் வழங்குவது அவசியமான பகுதி. பந்தி உபசரிப்புத் தலைவன் திராட்சை ரசத்தை எடுத்து, சுவைத்து, அது நன்றாய் இருந்தால் விருந்தினர்களுக்குப் பரிமாறுவான்.

கானாவில் நடந்த இந்தக் கல்யாணத்திலும் பந்தி உபசரிப்புத் தலைவன் வழக்கப்படி திராட்சை ரசத்தை விருந்தினர்களுக்கு வழங்கினான். எதிர்பார்த்ததைக் காட்டிலும் விருந்தினர்கள் அதிகம் பேர் வந்துவிட்ட காரணத்தால், திராட்சை ரசம் முழுதும் மிச்ச மில்லாமல் தீர்ந்துவிட்டது; மேலும் பரிமாறத் திராட்சை ரசம் இல்லை; கல்யாண வீட்டார் கலங்கினார்கள்.

இது விவரம் தெரிய வந்ததும், இயேசுநாதரின் அன்னை மேரி, தன புதல்வனிடம் சென்றாள். மெதுவாக அவரிடம் ''அவர்களிடம் திராட்சை ரசம் இல்லை'' என்று சுருக்கமாகச் சொன்னாள்.

தான் சொல்லுவதைக் குறிப்பால் உணர்ந்து, தம் புதல்வர் ஏதாவது வழி காட்டுவார் என்ற எண்ணத்தோடுதான் மேரி அவ்வாறு இயேசுநாதரிடம் சொன்னாள்.

உடனே இயேசுநாதர், ''அம்மா! இதைப்பற்றி நீயும் நானும் ஏன் பேச வேண்டும்? எனக்கு உரிய வேளை இன்னும் வரவில்லை'' என்று பதில் சொன்னார்.

இந்தப் பதிலைக் கேட்டு மேரி கலக்கம் அடையவில்லை. தன் விருப்பத்தைத் தன் புதல்வர் நிறைவேற்றி வைப்பார் என்ற நம்பிக்கை மேரிக்குத் திடமாக இருந்தது. ஆகவே, தாமதியாது பந்தி விசாரிப்போரிடம் திரும்பி, ''அவர் என்ன சொல்லுகிறாரோ அதைச் செய்யுங்கள்!'' என்று கூறினாள்.

விருந்தினர்கள் கைகால்களைச் சுத்தம் செய்துகொள்ளும் பொருட்டு, அங்கே ஆறு கற்சாடிகள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு சாடியும் மூன்று குடம் தண்ணீர் பிடிக்கும். இந்தச் சாடிகள் எல்லாம் தண்ணீர் தீர்ந்து போய்க் காலியாய் இருந்தன.

இது சமயம் கல்யாண வீட்டாருக்குள்ள கவலையைப் போக்குவது அவசியம் என்று இயேசுநாதர் எண்ணினார்.

ஆகவே, வேலைக்காரர்களைப் பார்த்து, "இந்தச் சாடிகள் அனைத்தையும் தண்ணீரால் நிரப்புங்கள்" என்று கூறினார்.

அதன்படி வேலைக்காரர்கள் செய்தார்கள்.



பிறகு இயேசுநாதர் அவர்களைப் பார்த்து, "சாடியில் இருப்பதைச் சிறிய பாத்திரங்களில் மொண்டு, பந்தி விசாரிப்புத் தலைவனிடம் கொடுங்கள்" என்று கூறினார்

அதன்படி மொண்டு எடுத்துப் போய், பந்தி விசாரிப்புத் தலைவனிடம் வேலைக்காரர்கள் கொடுத்தார்கள்

பரிமாற வேறு விதமான திராட்சை ரசம் பந்திக்கு வந்திருப்பதைக் கவனித்த, பந்தி விசாரிப்புத் தலைவன், அந்தத் திராட்சை ரசத்தில் கொஞ்சம் எடுத்து, வழக்கப்படி முதலில் ருசி பார்த்தான்.

அவனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. தன் வாழ்நாளிலேயே இத்தகைய சுவையான மதுவை இதுவரை அவன் அருந்தியதே இல்லை. "எல்லாரும் நல்ல மதுவை முதலில் பந்திக்கு வழங்குவார்கள்; பிறகுதான் சுவை குறைவாய் இருப்பதை வழங்குவது வழக்கம். இந்த வீட்டிலோ சுவை மிகுதியுள்ள மதுவைக் கடைசியில் வழங்குகிறீர்களே!" என்று ஆச்சரியத்துடன் கூறினான்.

இயேசுநாதர், "முதன் முதலாகச் செய்த புதுமை இது" என்று, இந்த நிகழ்ச்சியைப்பற்றி ஜான் என்னும் அப்போஸ்தலர் குறிப்பிட்டு இருக்கிறார்.

சந்தைக் கடை ஆக்காதீர்கள்

கானாவில் கல்யாணம் முடிந்துவிட்டது. இயேசுநாதரும் அவருடைய தாய் மேரியும் சகோதரர்களும், சீடர்களும் அங்கிருந்து புறப்பட்டார்கள். நாசரத்துக்குப் போகாமல் வடக்கே இருக்கும் கப்பர்நகூம் என்னும் ஊருக்குப் போனார்கள். நத்தானியலைத் தவிர்த்து, மற்ற சீடர்கள், கப்பர்நகூம் வட்டாரத்தைச் சேர்ந்தோர் ஆவர்.

கப்பர்நகூம் என்னும் இந்த ஊரைத் தமது வாசஸ்தலமாகக் கொண்டு, தாம் செய்ய இருக்கும் பணிகளைச் செய்வது என இயேசுநாதர் தீர்மானித்தார்.

அப்படித் தீர்மானித்தபோதிலும் அதிக நாட்கள் கப்பர்நகூம் என்னும் ஊரில் அவர் தங்கவில்லை. ஏனெனில், பாஸ்கு விழா சமீபித்துக்கொண்டிருந்தது. தமது பன்னிரண்டாம் வயதிலிருந்து, தொடர்ந்து ஆண்டுதோறும் ஜெருசலம் நகருக்குச் சென்று, இந்த விழாவில் இயேசுநாதர் கலந்துகொள்வது வழக்கம்.

அந்த வழக்கப்படி இந்த ஆண்டு நடைபெற இருக்கும் பாஸ்கு விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு, கப்பர்நகூமிலிருந்து ஜெருசலத்துக்கு இயேசுநாதர் புறப்பட்டார்.

முன்பு இயேசுநாதர் ஜெருசலத்திற்குச் சென்றதற்கும் இப்பொழுது இயேசுநாதர் ஜெருசலத்துக்குச் செல்வதற்கும் இடையில் பெருத்த ஒரு மாற்றம் உண்டு. முன்பு எல்லாம் ஜெருசலத்துக்குச் சென்றபோது, தமது தெய்வத்தன்மையை மறைத்துக்கொண்டு, சாதாரண ஒரு எளிய மனிதனைப் போலத்தான் இயேசுநாதர் சென்றிருக்கிறார்.

ஆனால், இப்பொழுதோ தாம் ஒரு மெசியா என்ற முறையில் அவர் ஜெருசலம் செல்கிறார்.

கப்பர்நகூமிலிருந்து ஜெருசலம் செல்ல வேண்டுமாயின், சமாரியா வழியாகச் செல்வதுதான், நேரான பாதை, சுருக்கமான பாதை. அப்படி இருந்தும், அந்த வழியாகச் செல்லாமல், ஜெருசலம் செல்லும் யூதர்கள், சுற்று வழியாகச் செல்வார்கள். ஏனெனில், சமாரியர்களுக்கும் யூதர்களுக்கும்

இடையில் பன்னெடும் காலமாக நேச மனப்பாங்கு நிலவ வில்லே. அதனுல்தான் யூதர்கள் சுற்று வழியாகவே ஜெரு சலம் போவது வழக்கம்.

அந்த வழக்கப்படிதான் தம் சீடர்களுடன் இயேசுநாதர் ஜெருசலம் சென்ருர். கோயிலே அடைந்ததும், அவர் அங்கே கண்ட காட்சி, இயேசுநாதருக்கு ஆத்திரத்தை உண்டாக் கிற்று. கோயிலின் பிரகாரங்கள் அனேத்திலும் சந்தையைப் போல் கடைகள் மிகுந்து இருந்தன.

பாஸ்கு விழாவின்போது ஏராளமான ஆடுகளேயும் மாடு களேயும் புருக்களேயும், யூதர்கள் பலி கொடுப்பது வழக்கம். பணமுள்ளவர்கள் ஆட்டுக்குட்டிகளேயும் எருதுகளேயும் பலி கொடுப்பார்கள் ஏழை எளியவர்கள் புருக்களேக் காணிக்கை யாகச் செலுத்துவார்கள்.

பேராசையுள்ள யூத குருமார்கள், வியாபாரிகளே நிய மித்து இந்தச் சந்தையை நடத்திவந்தார்கள். பாஸ்கு விழா வுக்கு வரும் பொது மக்களுக்கு அனுகூலம் செய்வதுபோல் நடித்து, தங்களுக்கு ஆதாயம் தேடும் காரியத்தில் அவர்கள் ஈடுபட்டு இருந்தார்கள். அதனுல்தான் கோயிலின் பிரகாரங் கள் முழுதும் சந்தைக் கடைகளே ஏற்படுத்த அவர்கள் அனு மதித்தார்கள்.

அதனுல் கோயிலேச் சுற்றிலும் சந்தடியும் கூச்சலும் குழப்பமும் மிகுதியாய் இருந்தன. ஆட்டுக்குட்டிகள் கத்து வதும், மாடுகள் கூப்பாடு போடுவதும் காதுகளேத் தொளேத் தன. கூடுகளுக்குள் அடைப்பட்டுக் கிடக்கும் புருக்கள் குமுறின. ஆடு மாடுகளின் சாணமும் புருக்களின் எச்சமும் கோயிலேச் சுற்றிலும் துர்க் கந்தத்தை உண்டாக்கின.

இவற்றைத் தவிர, காசுக்கடைகளும் பலசரக்குக் கடை களும் அங்கு இருந்தன.

காசுக் கடைக்காரர்கள் மேஜைகள்மீது நாணங்களைப் பரப்பி வைத்துக்கொண்டு நாணயமாற்றுச் செய்வார்கள், காசுகளை மாற்றும் சலசலப்பு ஓசை சதா கேட்ட வண்ணம் இருக்கும்.

அன்னிய நாடுகளிலிருந்து வரும் யூதர்கள் தங்களுடன் அந்நிய நாட்டு நாணயங்களை எடுத்து வருவார்கள். தீட்டானவை என்று அந்த நாணங்களை யூதர்கள் கருதுவது உண்டு. ஆகவே, அவற்றை யூத நாணயங்களாக மாற்றின பின்னர், பாஸ்கு விழாவுக்குத் தேவையான பண்டங்களை அந்த யூதர்கள் வாங்குவது வழக்கம்.

பரிசுத்தமாக இருக்க வேண்டிய கோயிலின் பிரகாரங் களில், இப்படி அசுத்தமும் சந்தடியும் சலசலப்பும் மிகுந் திருப்பதைக் கண்டு இயேசுநாதர் ஆத்திரப் பட்டார். ஆகவே, கீழே கிடந்த கயிறுகளை எடுத்து, ஒரு சவுக்காகப் பின்னினார்.



பிறகு, பிரகாரங்களில் நின்ற ஆடுகளையும் மாடுகளையும் அடித்து வெளியே துரத்தினார். அங்கும் இங்குமாக அவை சிதறியோடத் தலைப்பட்டன. தத்தம் ஆடு மாடுகளைப் பிடிப்பதற்கு, வியாபாரிகள் அவற்றின் பின்னே ஓடினார்கள்.

இயேசுநாதரோ காசுக்கடைகள் இருக்கும் பக்கம் சென்றார். காசுகள் இருக்கும் மேஜைகளைக் குப்புறக் கவிழ்த்தார். அதனால் நாணயங்கள் அங்கும் இங்கும் சிதறி விழுந்தன.

இதன் பின்னர், புறுக்கள் விற்பனை செய்யும் ஏழை எளிய

வர்களிடம் இயேசுநாதர் சென்றார். "புறாக்களை இவ்விடத்தைவிட்டு அப்புறப்படுத்துங்கள். என் தந்தையின் வீட்டைச் சந்தைக் கடை ஆக்காதீர்கள்" என்று கூறினார்,

தனி ஒருவராக நின்று இயேசுநாதர் இப்படி சந்தைக் கடையைக் கலைப்பதை மற்றவர்கள் ஏன் தடுக்கவில்லை? வியாபாரிகளும் காசுக் கடைக்காரர்களும் அவர்மீது கோபப் படாது, பயந்து இருக்கக் காரணம் என்ன?

கோயிலைச் சந்தைக் கடையாக மாற்றி, அசுத்தப்படுத்துவது குற்றம் என்பது வியாபாரிகளுக்கும் காசுக்கடைகாரர்களுக்கும் குருமார்களுக்கும் தெரியும். அதனால்தான் இயேசுநாதரை எதிர்க்கத் திறனின்றி அங்கும் இங்கும் சிதறியோடினார்கள். அவர்களின் மனச்சாட்சியே அவர்களைக் கோழைகள் ஆக்கிவிட்டது.

குருமார்களும் ஆட்சியாளர்களுமோ ஒரு வேளை இவர் மெசியாவாக இருக்கக் கூடுமோ என்று நினைத்தார்கள். ஆகவே, அவரை அணுகி, "நீர் இப்படி எல்லாம் செய்கிறீரே! எந்த அதிகாரத்தைக் கொண்டு செய்கிறீர்? அதற்கு ஏதாவது அடையாளம் காட்ட முடியுமா?" என்று கேட்டார்கள்.

உடனே இயேசுநாதர் அவர்களைப் பார்த்து, "அடையாளமா கேட்கிறீர்கள்? (தமது உடலைக் குறிப்பிட்டு) இந்த ஆலயத்தை இடித்துவிடுங்கள். மூன்றே நாட்களில் மீளவும் அதை நான் எழுப்பித் தருகிறேன்" என்று பதில் சொன்னார்.

"கோயிலை இடித்துவிடுங்கள். மூன்றே நாட்களில் எழுப்பித் தருகிறேன் என்று கூறுகிறாரே இந்த மனிதர்! இது நடக்கக் கூடிய காரியமா? ஆயிரக்கணக்கான ஆட்களைக் கொண்டு நாற்பத்தாறு ஆண்டுகள் தொடர்ந்து வேலை செய்து, கட்டிமுடித்த கோயில் அல்லவா இது! இதை மூன்றே நாட்களில் எழுப்பித் தருவாராமே!" என்று இகழ்ச்சியோடு கூறினார்கள்.

இயேசுநாதர் சொன்ன பதிலில் பொதிந்துள்ள கருத்தை, குருமார்களும் அதிகாரிகளும் புரிந்துகொள்ளவில்லை. இயேசுநாதர் தமது உடலைக் குறிப்பிட்டுச் சொன்னார். அவர்கள் கோயிலைக் குறிப்பதாக எண்ணிக்கொண்டார்கள்.

பிற்காலத்தில் இயேசுநாதர்மீது குருமார்கள் சுமத்திய குற்றங்களில், அவர் கோயிலை இடிக்கச் சொன்னார் என்பதும் ஒன்று.

நிக்கோதேமன்

தைரியமாக இயேசுநாதர் கோயிலில் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள், குருமார்களையும் அதிகாரிகளையும் மற்றவர்களையும் பிரமிக்கச் செய்தன. அவரை எதிர்க்க யாருக்கும் தைரியம் வரவில்லை. ஆயினும், அனைவரும் அவரைப்பற்றியே பேசிக்கொண்டு இருந்தார்கள்.

ஜெருசலத்தி லிருக்கும் கல்விமான்களும் பிரமுகர்களும் இயேசுநாதரைப்பற்றியே பேசினார்கள்; ஒரு வேளை இவர் மெசியாவாக இருக்கக் கூடுமோ என்றும் நினைத்தார்கள்.

இது சமயம் நிக்கோதேமன் என்னும் ஒரு பிரமுகர் ஜெருசலத்தில் இருந்தார்; அவர் நன்கு படித்தவர்; பரிசேயர்களைச் சேர்ந்தவர்; யூதர்களின் முக்கிய சங்கமான சனதரீம் சங்கத்தின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவர். செல்வாக்கு மிகுதியும் உள்ள இவரை, ஜனங்கள் பெரிதும் மதித்தார்கள்.

ஜெருசலம் கோயிலில் இயேசுநாதர் செய்த நடவடிக்கைகளை இவர் கவனித்தார்; அதற்குப் பின்னர் ஜெருசலத்திலிருந்துகொண்டே, இயேசுநாதர் புரிந்த புதுமைகளையும் கண்டார். இவர் மெசியாவாக இருந்தாலும் இருக்கக் கூடும் என்று நிக்கோதேமன் யூகித்தார். ஆகவே, நேரில் சென்று, இயேசுநாதரைச் சந்தித்து, உரையாடிப் பார்த்தால், உண்மை தெரிந்து போகும் என்று கருதினார் நிக்கோதேமன்.

ஆயினும், பட்டப் பகலில் சென்று இயேசுநாதரைச் சந்தித்துப் பேச, அவருக்குத் தைரியம் வரவில்லை. பிறருக்குத் தெரியும்படி தான் இயேசுநாதரிடம் போவது, தமக்குள்ள மதிப்பைக் குறைத்துவிடக் கூடும் என்று நிக்கோதேமன் அஞ்சினார்.

ஆகவே, இரவு நேரத்தில், யாருக்கும் தெரியாமல், இயேசு நாதர் இருக்கும் இடத்துக்கு நிக்கோதேமன் போனார்.

நிக்கோதேமனை இயேசுநாதர் அன்போடு வரவேற்றார்; தம் அருகே உட்காரும்படி சொன்னார்.



நிக்கோதேமனும் மரியாதையுடன் அருகே உட்கார்ந்தார். பிறகு இயேசு நாதரை நோக்கி, "ரபியே! இறைவனிடமிருந்து வந்திருக்கும் போதகராய் தாங்கள் இருக்கிறீர். இல்லையேல் நீர் செய்கின்ற புதுமைகளை உம்மால் செய்ய இயலாது!" என்றார்.

அதற்கு இயேசுநாதர், "ஒருவன் மீண்டும் பிறந்தாலன்றி இறைவனின் அரசில் நுழையான்" என்று சுருக்கமாக, ஆனால் பொருள் பொதித்த ஒரு பதிலை, நிக்கோதேமனுக்குச் சொன்னார்.

இயேசுநாதர் சொன்ன பதிலின் உட்கருத்தை நிக்கோதேமனால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையால், இயேசுநாதரிடம், "வயதான ஒருவன் மீண்டும் பிறப்பது எப்படி? தன் தாய் வயிற்றில் நுழைந்து மறு முறை பிறப்பது அவனுக்கு எப்படிச் சாத்தியப்படும்?" என்று ஓரளவு கிண்டலாகக் கேட்டார் நிக்கோதேமன்.

மீளவும் பிறப்பது என்றால் என்ன? இதை இங்கு நாம் சற்று விவரிப்பது நலம்.

தீய எண்ணங்களிலும் பழக்க வழக்கங்களிலும் தோய்ந்து வாழ்க்கை நடத்திய ஒருவன், அந்தத் தீய எண்ணங்களையும் பழக்க வழக்கங்களையும் விட்டுவிட்டு, இறைவனின் அருளைப் பெற்று, மனந் திருந்தி நல்ல வாழ்வு

வாழ முன்வந்துவிட்டான் என்று வைத்துக்கொள்வோம். அப்படி மாற்றம் அடைந்து புது வாழ்வு வாழ்பவனே, புதுப் பிறவி எடுத்தவன் என்று கருதுவது கிறிஸ்தவ சமய மரபு

எனவே இந்த மரபை ஒட்டி, இயேசுநாதர் நிக்கோதேமனுக்குப் பதில் சொல்லத் தொடங்கினார்: ''உடலோடு ஒட்டிய பிறப்பை மட்டும்தான் நீங்கள் பிறப்பு என நினைக்கிறீர்கள். ஆனால், ஆன்மாவோடு தொடர்புள்ள தெய்வீகப் பிறப்பு ஒன்று இருக்கிறது. அந்தத் தொடர்பு எத்தகையது என்பதை உங்களால் அறிய முடியாவிட்டாலும், அது உண்டு என்பது மட்டும் உண்மை. காற்று வீசுகிறது. அதை நாம் அறிகிறோம். ஆனால் அது எங்கேயிருந்து வருகிறது அது எங்கே செல்கிறது என்பதை நம்மால் அறிய முடிவது இல்லை. அதே போல, இப்புது உயிர் எங்கே இருந்து வருகிறது, என்ன செய்கிறது என்பதை உங்களால் அறிய முடியாது. ஆயினும் அது இருப்பது மட்டும் உண்மை'' என்று சொன்னார்.

இயேசுநாதர் சொன்ன இந்த விளக்கத்தை நிக்கோதேமன் புரிந்துகொள்ள வில்லை. ''இது எவ்வாறு சாத்தியம் ஆகும்?'' என்று தயக்கத்துடன் இயேசுநாதரை அவர் கேட்டார்.

யூதர்களுக்கு மதபோதகராய் இருந்தும், இந்த உண்மையை நிக்கோதேமன் புரிந்துகொள்ளாமல் பேசுவதைக் குறித்து இயேசுநாதர் வியப்படைந்தார். ''இஸ்ராயேலர்களுக்குப் போதகராய் இருக்கும் நீர், இந்த எளிய உண்மையைத் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறீரே?'' என்று இயேசுநாதர் சொன்னார்.

இன்னும் அனேக உண்மைகளை இயேசுநாதர் நிக்கோதேமனுக்குச் சொன்னார்.

நிக்கோதேமனிடம் நல்லெண்ணமும் உண்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் இருந்தன. ஆயினும் தன்னைப்பற்றி, மற்றவர்கள் என்ன நினைப் பார்களோ என்ற அச்சமும் கூடவே இருந்ததால், நிக்கோதேமன் ஒரு கோழையைப் போல் நடந்துகொண்டார்.

கோழையைப் போல் நடந்துகொண்டபோதிலும் நல்லெண்ணமும் ஆர்வமும் இருந்த காரணத்தால், இயேசுநாதரை அவர் பெரிதும் மதித்தார்; பிற்காலத்தில் அவர்பால் பரிவோடு நடந்துகொண்டார்; சிலுவையில் உயிர்நீத்த இயேசுநாதருக்குச் செய்ய வேண்டிய மரியாதைகளைத் தயக்கமின்றிச் செய்தார்.

பொது வாழ்வில் ஒருவன் ஈடுபட விரும்பினால், அறிவையும் உணர்வையும் மட்டும் கொண்டு அவன் வெற்றி காண முடியாது. ஆன்ம உணர்வும் இறையருளும் நம்பிக்கையும் இருந்தால்தான் வெற்றி காண முடியும்.

ஆன்ம உணர்வு நம்பிக்கையை உண்டாக்கும்; நம்பிக்கை தியாகம் புரியத் தூண்டும்; தியாகம் வெற்றியைத் தேடித் தரும்.

இங்கு வெற்றி என்பது பிறரை ஆட்கொண்டு, அவர்கள், திருந்திய வாழ்வு வாழ வழிகாட்டுவதைக் குறிக்கும்; அடிமைப்படுத்துவதைக் குறிக்காது. இயேசுநாதர் கொண்ட வெற்றி, பிறரை ஆட்கொண்டதே யல்லாமல், யாரையும் அந்த வெற்றி அடிமைப்படுத்த வில்லை.

சமாரியப் பெண்

அறிஞர் நிக்கோதேமனைச் சந்தித்த பிறகு, இயேசுநாதர் சில மாதங்கள் யூதேயாப் பகுதியில் பிரயாணம் செய்தார். பற்பல இடங்களுக்கும் சென்று உபதேசம் செய்தார்.

இயேசுநாதர் புரிந்த சில புதுமைகளையும், ஆடுமாடுகளை விரட்டி, ஆலயத்தை அவர் பரிசுத்தப்படுத்திய துணிச்சலையும் கண்டு, கேள்வியுற்று, மக்கள் திரள் திரளாக வந்து, இயேசுநாதர் செய்யும் உபதேசங்களைக் கேட்டார்கள். அவர் புரியும் புதுமைகளைப் பார்த்தார்கள்.

இதனால் ஜான் முனிவரிடம் ஜனங்கள் செல்வது குறைந்து போயிற்று. இயேசுநாதரிடம் மக்கள் வருவது அதிகமாயிற்று.

ஜான் முனிவரின் சீடர்கள், மக்களின் இந்தப் போக்கைக் கண்டு வருந்தினர். தங்கள் குரு ஜானிடம், இதைக் குறித்து முறையிட்டனர்.

தமது நிலையை உள்ளது உள்ளபடி தம் சீடர்களுக்கு ஜான் முனிவர் விளக்கிச் சொன்னார்: "இயேசுநாதருக்கு முன்னோடியாக வந்த நான், அவருடைய சேவைக்கு இடம் கொடுத்தல் அவசியம். எனது வேலை முடிந்தது" என்று கூறினார் புனலாட்டும் ஜான்.

புனலாட்டும் ஜான் முனிவரின் இந்த உயர்ந்த மன நிலையை யாரும் போற்றாமல் இருக்க முடியாது.

யூதேயாவின் வடக்கு எல்லையில் இருந்த இயேசுநாதரும் அவருடைய சீடர்களும் அந்த எல்லையைக் கடந்து, கலிலேயா செல்ல வேண்டும்.

யூதேயாவின் எல்லையை அடுத்து, சமாரியா என்று ஒரு பிரதேசம் இருக்கிறது. இங்கு வாழும் மக்கள் சமாரியர் எனப்படுவர். இவர்களை யூதர்கள் பெரிதும் வெறுத்தார்கள்.

இதனால் பூசலும் பிணக்கும் பகைமையும் அதிகமாயின. ஒரு சமாரியனை வழியில் காண நேர்ந்தால், யூதன், தனது முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொள்வான்! தப்பித் தவறிப் பார்க்க நேர்ந்தால், முறைத்துப் பார்த்துவிட்டு, யூதன் அப்பால் போய்விடுவான். சமாரியனுடைய ஆடை தன்மீது பட்டுவிட்டால், தீட்டுப்பட்டுவிட்டதாக நினைத்துக் கொண்டு வீடு சென்று, யூதன் தன்னைச் சுத்தப்படுத்திக் கொள்வான்.

சமாரியர்களை யூதர்கள் வெறுத்ததைப்போலவே, யூதர்களைச் சமாரியர்களும் வெறுத்தார்கள். அவர்களுக்குப் போட்டியாக, கரிசீம் மலையில் ஒரு கோயிலையும் அவர்கள் நிருமாணித்தார்கள்.

இதனால் மனக் கசப்பும் பகைமையும் நாளுக்கு நாள் வளர்ந்ததே யன்றிக் குறையவில்லை. பன்னெடும் காலமாக இருந்துவரும் இந்தப் பகைமை எளிதில் நீங்குவதாய் இல்லை. இன்றும் இந்தப் பகைமை உணர்ச்சி சமாரியர்களுக்கும்

யூதர்களுக்கும் இடையே ஆங்காங்கு நிலவுவதாகக் கூறு கிறார்கள்.

ஆகவே, கலிலேயா செல்ல விரும்பும் யூதர்கள், சமாரியா வழியாகப் போக மாட்டார்கள். சுற்றுப் பாதை வழியாகத் தான், ஜெருசலத்திலிருந்து கலிலேயாவுக்குப் போவார்கள்.

கலிலேயாவிலிருந்து ஜெருசலத்துக்கு வந்தபோது இயேசுநாதர் சுற்று வழியாகத்தான் வந்தார். ஆனால், இப்பொழுது ஜெருசலத்திலிருந்து கலிலேயா திரும்பும்போது, சமாரியப் பிரதேச வழியாகச் செல்லத் தீர்மானித்தார்.

அதன்படி தம் சீடர்களை அழைத்துக்கொண்டு சமாரியப் பிரதேசத்தில் அவர் நுழைந்தார். இரண்டு நாட்கள் பிரயாணம் செய்து, ஒரு நாள் நண்பகல் நேரத்தில், அவர்கள் எல்லாரும் சீக்கார் என்னும் ஊர் அருகே வந்து சேர்ந்தார்கள்.

ஊருக்குப் பக்கத்திலே பிரசித்தமான கிணறு ஒன்று இருந்தது. அதற்கு யாக்கோப்பின் கிணறு என்று பெயர். ஊர் மக்கள் எல்லாரும் இந்தக் கிணற்றுக்கு வந்துதான் குடி தண்ணீர் எடுத்துப் போவது வழக்கம். குளத்துக்கோ அல்லது கிணற்றுக்கோ சென்று நம் நாட்டுப் பெண்கள் குடங்களில் குடி தண்ணீர் எடுத்து வருவதைப் போலவே, இஸ்ராயேல் நாட்டிலும் குடி தண்ணீர் எடுக்கப் பெண்கள் போவது உண்டு.

காலை நேரத்திலும் மாலை நேரத்திலும்தான் பெண்கள் இந்த யாக்கோப்பின் கிணற்றுக்கு வந்து, தண்ணீர் எடுத்துப் போவார்கள். நண்பகல் நேரத்தில் யாரும் தண்ணீர் எடுக்க வருவது வழக்கம் இல்லை.

இயேசுநாதரும் அவருடைய சீடர்களும் கிணற்று அருகே வந்தபோது, அங்கே யாரும் இல்லை. ஆகவே, களைப்புடன் வந்திருந்த இயேசுநாதர், யாக்கோப் கிணற்றின் சுற்றுச் சுவரின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து ஓய்வு எடுத்துக் கொண்டார்

''அண்ணலே! தாங்கள் இங்கேயே இருங்கள்; நாங்கள் ஊருக்குள் சென்று உணவு வாங்கி வருகிறோம்'' என்று

சொல்லி விடைபெற்றுக்கொண்டு, சீடர்கள் ஊருக்குள் சென்றார்கள்.

அவர்கள் சென்ற சிறிது நேரத்திற்கு எல்லாம், சமாரியப் பெண் ஒருத்தி, கையில் வெறும் குடம் ஒன்றை எடுத்துக்கொண்டு, யாக்கோப் கிணற்றில் தண்ணீர் எடுத்துப் போக வந்தாள். வந்தவள், குடத்தின் கழுத்தில் கயிற்றைக் கட்டி, கிணற்றுக்குள் விட்டுத் தண்ணீரை மொண்டு வெளியே இழுத்தாள்.

இதைப் பார்த்தும் இயேசுநாதர் அந்தப் பெண்ணிடம், "தாகமாய் இருக்கிறது. எனக்குக் கொஞ்சம் தண்ணீர் பருகத் தருவாயா?" என்று கேட்டார்.



இயேசுநாதர் இவ்வாறு கேட்டதும், அந்தச் சமாரியப் பெண் வியப்புற்று நின்றாள். பிறகு ஏளனக் குறிப்போடு அவரை நோக்கி, "யூதரான நீர், சமாரியப் பெண்ணான என்னிடம் பருகத் தண்ணீர் கேட்பது எப்படி?" என்று கேட்டாள்.

அதற்கு இயேசுநாதர், "கடவுளின் அருள் எத்தகையது என்பதை நீ இன்னும் அறியவில்லை. உன்னிடம் தண்ணீர் கேட்பது யார் என்றும் நீ அறியவில்லை. அறிந்திருந்தால், எனக்குத் தண்ணீர் வேண்டும் என்று அவரிடம் நீ கேட்டிருப்பாய். எப்பொழுதும் வற்றாது சுரக்கும் ஜீவ நீரை உனக்கு அவர் தந்து இருப்பார்!" என்றார்.

இயேசுநாதர் சொன்னதை, அந்தச் சமாரியப் பெண்ணால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏதோ சிறப்பான ஒரு கிண

றைப்பற்றி இயேசுநாதர் கூறுவதாக அந்தப் பெண் நினைத்துக்கொண்டாள். ஆகவே, அவரை நோக்கி மரியாதையுடன், ''ஐயா! குடம் ஏதும் உம்மிடம் இல்லை! அப்படி இருக்கும் போது, 'ஜீவ நீரை' எப்படி நீர் மொள்ளப் போகிறீர்? இந்தக் கிணறும் வெகு ஆழம்'' என்று கூறினாள்.

பிறகு மீண்டும் பேச்சைத் தொடர்ந்து, ''இந்தக் கிணற்றை வெட்டிய எங்கள் மூதாதை யாக்கோப்பை காட்டிலும் நீர் பெரியவரா என்ன? அவரும் அவருடைய பிள்ளைகளும், ஆடு மாடுகளும் இந்தக் கிணற்று நீரைத்தான் பருகி இருக்கிறார்கள்'' என்று பெருமை தொனிக்க அவள் சொன்னாள்.

இப்படி அவள் சொன்னதும், இயேசுநாதர் அவளை நோக்கி, ''இந்தக் கிணற்று நீரைப் பருகுபவர்களுக்கு தாக விடாய் மீண்டும் ஏற்படாமல் போகாது. ஆனால், நான் தரும் தண்ணீரைப் பருகுபவர்களுக்குத் தாகவிடாய் என்பது மீண்டும் ஏற்படவே ஏற்படாது. எப்பொழுதும் ஜீவனுக்கு இதம்தரும் ஒரு ஊற்றுக்கண்ணாக அது விளங்கும்'' என்று கூறினார் இயேசுநாதர்.

இப்பொழுதும் அந்தச் சமாரியப் பெண்ணுக்குப் புரியவில்லை.

இயேசுநாதர் ஆன்ம வேட்கையைத் தணிக்கும் அருள் வெள்ளத்தைப்பற்றிக் கூறினார். அந்தச் சமாரியப் பெண்ணோ, சாதாரணக் கிணற்று நீரைப்பற்றிய நினைவிலே தோய்ந்து இருந்தாள். ''நீர் வேட்கையை முற்றும் போக்கக் கூடிய தண்ணீர் இருக்கிறதாமே! அத்தகைய தண்ணீர் கிடைக்குமேயானால், இந்தக் கிணற்றுக்கு நாள்தோறும் வர வேண்டிய அவசியம் இல்லாது போகுமே!'' என்று எண்ணினாள்.

இந்த எண்ணம் வரவே, அவள் இயேசுநாதரிடம் ''ஐயா! தாங்கள் கூறும் தண்ணீரை எனக்குப் பருகத் தாருங்கள்'' என்று வேண்டினாள்.

தமது உளப்பாங்கை அந்தப் பெண் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்பதை இயேசுநாதர் தெரிந்துகொண்

டார். அவள் நடத்திவரும் பாவ வாழ்க்கையைக் குறிப்பால் உணர்த்தி, அவளுக்கு நன்மை செய்ய அவர் திருவுளம் பற்றினர். ஆகவே, அவளிடம், ''நீ சென்று உன் கணவனை இங்கே அழைத்து வா'' என்று கூறினர்.

''கணவன்'' என்ற சொல்லைக் கேட்டதும் அந்தப் பெண் துணுக்குற்ருள். உலகமே சுழல்வதுபோல அவளுக்குத் தோன்றிற்று. பிறகு ஒருவாறு சமாளித்துக்கொண்டு, தழுதழுத்த குரலில், ''ஐயா! எனக்குக் கணவன் யாரும் இல்லை!'' என்று சொன்னுள்.

''பெண்ணே! நீ உண்மையைக் கூறிஞய்! இதுவரை உனக்கு ஐந்து ஆடவர் கண்வன்மாராய் இருந்திருக்கின்றனர்! இப்பொழுது இருப்பவனும் உன் கணவன் அல்லன் என்பதும் மெய்தான்!'' என்று சொன்னர் இயேசுநாதர்.

இப்படி அவர் சொன்னதும், அந்தச் சமாரியப் பெண் வியப்பு மேலிட்டு நின்ருள். பாவம் நிறைந்த தன் வாழ்க்கையை அறிமுகமில்லாத இந்த மனிதர் எப்படி அறிந்தார்?

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. தன் பாவ வாழ்க்கையைப்பற்றிப் பேச அவள் நாணப்பட்டாள். ஆகவே, பேச்சின் போக்கை வேறு விஷயத்துக்கு மாற்றி, சமாளிக்கப் பார்த்தாள். ''ஐயா! உம்மைப் பார்த்தால் ஒரு தீர்க்க தரிசிபோல் தோன்றுகிறது. ஆகையால்தான், நான் உம்மை ஒன்று கேட்க விரும்புகிறேன். அதோ தெரிகிறதே கரிசீம் மலை! அதுதான் கடவுளை வழிபடுவதற்கு ஏற்ற இடம் என்று கருதி, எங்கள் முன்னேர்கள் வழிபட்டு வந்தனர். நாங்களும் வழிபட்டு வருகிருேம். யூதர்களோ ஜெருசலம்தான் கடவுளை வழிபடுவதற்கு ஏற்ற இடம் என்று கூறுகின்றனர். இந்த இரண்டில் எது சரியான இடம்?'' என்று கேட்டாள்.

வேண்டும் என்றே அந்தப் பெண் பேச்சை மாற்றுகிருள் என்பதை இயேசுநாதர் தெரிந்துகொண்டார்; ஆயினும் அதற்காக அந்தப் பெண்ணை இயேசுநாதர் கடிந்துகொள்ளவில்லை. அமைதியான முறையில் பதில் சொல்லி, அந்தப் பாவிப் பெண்ணின் மனத்தை அவர் திருத்த முயன்ருர்.

''பெண்ணே! நான் சொல்லுவதை நம்பு. இந்த மலை

யிலும் அன்று, ஜெருசலம் நகரத்திலும் அன்று; இறைவனை உள்ளத்தில் இருத்தி வழிபடுவதே சாலச் சிறந்தது. அதற்குரிய காலமும் இதோ நெருங்குகிறது. வெளிப்பகட்டாக இறைவனை வழிபட்டு, மனநிறைவு பெற்ற காலம் கடந்துவிட்டது. கடவுள் ஆவியாய் இருக்கிறார். அவரை உள்ளத்தோடும் உணர்வோடும் வழிபடுவதே உண்மையான வழிபாடு ஆகும். இதை நீ தெரிந்துகொள்'' என்று உபதேசம் செய்தார்.

இதற்கு அந்தப் பெண், ''ஐயா! மெசியா ஒருவர் வருவார் என்று நாங்கள் நம்புகிறோம். அவர் வரும்போது எல்லாவற்றையும் எங்களுக்கு அவர் அறிவிப்பார்'' என்று கூறினாள்.

''அந்த மெசியா நான்தான்'' என்றார் இயேசுநாதர்.

இந்த வார்த்தைகளை இயேசுநாதர் கூறி முடிப்பதற்குள், உணவு வாங்க ஊருக்குள் சென்றிருந்த சீடர்கள், யாக்கோப் கிணற்றுக்குத் திரும்பினார்கள். அங்கே தங்கள் குரு சமாரியப் பெண் ஒருத்தியோடு உரையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்து, திடுக்கிட்டுத் திகைத்து நின்றார்கள்.

ஏனெனில், யூதர்களிடையே பெண்களுக்கு அந்தஸ்து எதுவும் கிடையாது; பொது இடங்களில் பெண்களோடு பேசுவதோ, அல்லது அவர்களைப் பார்ப்பதோ கண்ணியக் குறைவு என்று யூதர்கள் கருதினார்கள்; மனைவியாய் இருந்தாலும் சரி, மகளாய் இருந்தாலும் சரி, சகோதரியாய் இருந்தாலும் சரி, அவர்களுடன் தெருவில் பேசக் கூடாது.

இத்தகைய ஒரு மனப்பாங்கு யூதர்களிடையே நிலவிற்று. அதனால்தான், இயேசுநாதர் சமாரியப் பெண் ஒருத்தியோடு பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்ததும் சீடர்கள் வியந்து நின்றனர்.

அந்தப் பெண்ணோ, இயேசுநாதர் கூறின மகத்தான செய்தியைச் செவிமடுத்ததும், தான் கருதி வந்த காரியத்தை மறந்தாள். குடத்தைக் கிணற்றடியிலே போட்டுவிட்டு ஊருக்குள் ஓடினாள்.

சமாரியப் பெண் சென்ற பின்பு, சீடர்கள் இயேசு

நாதரை அணுகினார்கள். "குருவே! இதோ உணவு கொணர்ந்திருக்கிறோம், சாப்பிடுங்கள்" என்று சொன்னார்கள்.

தமது காரியத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்த இயேசுநாதர் பசியையும் களைப்பையும் மறந்தார். அவர், தம் சீடர்களை நோக்கி, "சாப்பிட வேண்டிய உணவு எனக்கு வேறு உண்டு. அந்த உணவைப்பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரிய முடியாது" என்று சொன்னார்.

கருத்தை விளங்கிக்கொள்ள முடியாமல், சீடர்கள், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். "இவர் கூறும் உணவை இங்கு யார் கொணர்ந்து கொடுத்திருக்கக் கூடும்?" என்று ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டார்கள்.

தான் கூறியதன் கருத்தைச் சீடர்கள் விளங்கிக்கொள்ளவில்லை என்பதை இயேசுநாதர் தெரிந்துகொண்டார். ஆகவே, அதைப்பற்றி அவர்களுக்கு அவர் விளக்கம் செய்தார். "எதற்காக என் தந்தை என்னை இந்த வேலைக்கு அனுப்பினாரோ, அந்த வேலையை அவர் திருவுளப்படி செய்து முடிப்பதே நான் அருந்தும் உணவாகும்" என்று விளக்கம் தந்தார்.

சமாரியப் பெண்ணோ விரைவாக ஊருக்குள் சென்றாள், ஜனங்களைப் பார்த்துப் பரபரப்புடன், "மாந்தர்களே! வாருங்கள்; நான் கூறுவதைக் கேளுங்கள்" என்று கூறினாள். "ஒரு மனிதர் வந்திருக்கிறார்! நான் செய்த அனைத்தையும் அப்பட்டமாக அவர் கூறிவிட்டார். அவர்தான் மெசியாவோ என்னவோ!" என்று உணர்ச்சி வயப்பட்டுக் கூறினாள்.

இதைக் கேட்டதும் ஊர் மக்கள் பரபரப்பு அடைந்தனர். "மெசியா வரப் போகிறார்! மெசியா வரப் போகிறார்!" என்று அல்லும் பகலும் கேள்விப்பட்டுக் கொண்டிருந்த அவர்களுக்கு, மெசியாவைக் காண வேண்டும் என்ற ஆவல் தீவிரமாக உண்டாயிற்று. ஆகவே,

இயேசுநாதரைத் தரிசிப்பதற்கு அவர்கள் திரள் திரளாக வந்தனர்.

கிணற்றண்டை இயேசுநாதரைச் சந்தித்து, அவர் கூறும் நல்லுரைகளை ஆர்வத்தோடு செவிமடுத்தனர். அவர் சொற்படி நடக்க ஆயத்தமாயினர். ''எங்கள் ஊருக்கு வந்து தங்க வேண்டும்'' என்று அவரிடம் விரும்பி வேண்டினர்,

இயேசுநாதரும் சமாரியர்களின் விருப்பத்துக்கு இசைந்து, சீக்காருக்குச் சென்று, இரண்டு நாட்கள் அங்கே தங்கினர்.

அப்போது இயேசுநாதர் செய்த உபதேசங்களைச் சமாரியர்கள் செவி குளிர, மனம் குளிரக் கேட்டார்கள். இயேசுநாதரைப் பின்பற்றி நடக்க இன்னும் சிலர் முன் வந்தார்கள். இயேசுநாதரின் பேச்சு இதயத்தைத் தொட்ட காரணத்தால், அவர்களுக்குத் தாமாகவே நம்பிக்கை உதய மாயிற்று. ஆகவே, செய்தி சொன்ன சமாரியப் பெண்ணைப் பார்த்து, ''பெண்ணே! உன் கூற்றைக் கேட்டதனல் இயேசுநாதரை நாங்கள் ஏற்றுக்கொண்டோம் என்று நீ எண்ணதே! அவர் பேச்சைக் கேட்ட பின்னர், அவர்தாம் மெசியா என்பதை நாங்கள் அறிகிறோம், நம்புகிறோம்'' என்று கூறினர்கள்.

இரண்டாம் புதுமை

சமாரியர்களின் விருப்பத்துக்கு இணங்கி, இயேசுநாதர் சீக்காரில் இரண்டு தினங்கள் தங்கினர். அந்த இரண்டு நாட்களிலும் இயேசுநாதர் புதுமை எதுவும் புரியவில்லை. அப்படி யிருந்தும், அந்த ஊர் மக்கள் இயேசுநாதரை நம்பி ஞர்கள். அவர் கூறின அறிவுரைகளைக் கேட்ட பின்னர், அவர்தான் உலக மீட்பர் என்பதை அறிந்து அவரைப் போற்றினர்கள். அடையாளம் எதுவும் கேட்காமல், தம்மை நம்பி ஏற்றுக்கொண்ட காரணத்தால், இயேசுநாதர்

சமாரியர்களிடம் அலாதியான பிரியம் வைத்திருந்தார்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், தன்பால் அன்பு பூண்டுள்ள சமாரியர்களிடம் விடை பெற்றுக்கொண்டு, கலிலேயாவில் இருக்கும் நாசரத்துக்கு அவர் புறப்பட்டார்.

திருமண விருந்தின்போது, இயேசுநாதர் புரிந்த புதுமையைக் கேள்விப்பட்டு, கலிலேயா மக்கள் பெரிதும் வியப்படைந்தார்கள். தங்கள் ஊர்க்காரர் புதுமைப் புரிவதைக் குறித்துப் பெருமை அடைந்தார்கள். இப்பொழுது அவர் தங்கள் பிரதேசத்துக்கு வரப்போகிருர் என்பதை அறிந்து ஆனந்தம் கொண்டார்கள்.

நாசரத்திலிருந்து கப்பர்நகூமுக்குத் திரும்பும்போது மீண்டும் ஒரு முறை இயேசுநாதர் வந்தார். அவர் அங்கே



தங்கி இருந்தபோது, கப்பர்நகூம் என்னும் ஊரிலிருந்து, அரச சபை அதிகாரி ஒருவன் இயேசுநாதரிடம் வந்தான். பரபரப்புடன் அவரை அணுகி, ''பெருமானே! தாங்கள் கப்பர்நகூமுக்கு வந்து, நோயுற்றுச் சாகக் கிடக்கும் என் புதல்வனைக் குணப்படுத்த வேண்டும்'' என்று அவரைக் கெஞ்சினுன்.

பாவிகள் மனந் திருந்தி, நல்வாழ்வு வாழ வழிகாட்டும் பொருட்டு, இயேசுநாதர் இந்த மண்ணுலகுக்கு வந்திருக்கிறார். ஆனால், மக்களோ அவர் செய்யும் போதனைகளைக் கேட்காமலும் நம்பாமலும் புதுமைகளைப் புரியும்படி பல முறை அவரிடம் வேண்டினர்.

இத்தகைய மனப்பாங்கு கூடாது என்று இயேசுநாதர் பல முறை எடுத்துக்காட்டிப் போதனைசெய்து இருக்கிறார்.

ஆகவே, அங்கு இருந்த மக்களை நோக்கி, ''அடையாளங்களையும் அற்புதங்களையும் கண்டாலன்றி, நீங்கள் நம்புகிறதில்லை!'' என்று கூறினார்.

வந்த அதிகாரியோ பதறினான். ''ஐயனே! தாங்கள் வந்து, என் குழந்தையைக் குணப்படுத்துங்கள். இல்லையேல், அவன் இறந்துவிடக் கூடும்'' என்று கதறினான்.

தக்க சந்தர்ப்பம் வாய்க்கும்போது புதுமைகளைப் புரிந்து, தாம் தேவகுமாரன் எனபதைக் காட்ட இயேசுநாதர் தயங்கியது இல்லை.

இப்போது வந்துள்ள அதிகாரியின் மனநிலையை இயேசுநாதர் புரிந்துகொண்டார். அவனுக்கு இருக்கும் துயரத்தைப் போக்கக் கருதி, அதிகாரியை நோக்கி, ''அன்பனே! நீ திரும்பிப் போ! உன் மகன் பிழைத்துக்கொள்வான்'' என்று கூறினார்.

இப்படி இயேசுநாதர் ஆசி சொன்னபோது, பிற்பகல் ஒரு மணி இருக்கும். அதிகாரி மகிழ்ச்சி அடைந்தான்.

இருட்டிவிட்டதால் கப்பர்நகூமுக்குத் திரும்பாமல், அன்றிரவு கானாவிலே தங்கி இருந்தான்.

மறு தினம், பொழுது புலர்ந்ததும், அவன் புறப்பட்டான். கானாவிலிருந்து கப்பர்நகூம் இருபது கல் தொலைவில் இருந்தது. அந்த அதிகாரி தன் ஊரை அணுகிய சமயம், சிப்பந்திகள் மகிழ்ச்சியுடன் அந்த அதிகாரியைச் சந்தித்தார்கள். ''ஐயா! தங்கள் புதல்வரின் உடல் நிலை முற்றும் சீர்பட்டுவிட்டது. அவர் பிழைத்துக்கொண்டார்'' என்று சொன்னார்கள்.

''உடல் நிலை எப்படிக் குணமாயிற்று? குணமான சமயம் என்ன மணி இருக்கும்?'' என்று அந்த அதிகாரி வினவினன்.

''நேற்றுப் பிற்பகல் ஒரு மணி இருக்கும். அப்பொழுது தான் தங்கள் புதல்வர் குணமடைந்தார்'' என்று சிப்பந்திகள் சொன்னூர்கள்.

அதிகாரி அடைந்த ஆச்சரியத்துக்கு ஓர் அளவு இல்லை.

இதன் பின்னர், அந்தக் குடும்பத்தார் அனைவரும் கிறிஸ்துவை நம்பி, அவரைப் பின்பற்றி வந்தார்கள்.

இந்தச் சம்பவத்தைக் கானுவில் நடந்த இரண்டாம் புதுமை என்று அப்போஸ்தலர் ஜான் குறிப்பிட்டு இருக்கிறார். (4. 54)

இந்த மண்ணுலக வாழ்க்கையில் இயேசுநாதர் பல புதுமைகளைப் புரிந்திருக்கிறார். தாம் செய்யும் போதனைகளைக் கேட்டு, புதுமைகளைக் கண்டு, விசுவாசம் கொண்டு, மக்கள் மனந் திருந்தி நல்வாழ்வு வாழ்வதை இயேசுநாதர் விரும்பியே இங்ஙனம் செய்தார். பிறருக்கு உதவி செய்யும் பொருட்டும், பிறர் படும் துயரைத் துடைக்கும் பொருட்டும் இயேசுநாதர் புதுமைகள் பல புரிந்து இருக்கிறார். இதை நினைவில் வைத்துக்கொண்டு, இயேசுநாதரின் வாழ்க்கையைப் படிப்பது அவசியமாகும்.

சொந்த ஊரில்

இரண்டாவது புதுமையைக் கானுவில் புரிந்த பின்னர், இயேசுநாதர் அங்கிருந்து புறப்பட்டு, தமது சொந்த ஊரான நாசரத்துக்குச் சென்றார்.

நாசரத்து வாசிகள், இயேசுநாதரின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். ஏனெனில், அவர் புரிந்த புதுமைகளைக் கேள்வியுற்று, ''எங்கள் ஊர்க்காரர்! எங்கள் ஊர்க்காரர்!'' என்று பெருமையுடன் பேசிக்கொண்டார்கள்.

ஆயினும் கலிலேயாப் பிரதேசத்துக்கு வந்ததும், உட னடியாக, இயேசுநாதர் நாசரத்துக்குப் போகவில்லை. கப்பர்நகூமைத் தமது வாச ஸ்தலமாகக் கொண்டு, அதன் சுற்று வட்டாரங்களில் இருக்கும் ஊர்களுக்கு எல்லாம் சென்று, யூதர்களின் சினக்கோக் சபைகளில் உபதேசம் செய்தார். ''மனம் திருந்தி நல்வாழ்வு வாழுங்கள்! மனம் திருந்தி நல்வாழ்வு வாழுங்கள்!'' என்று ஊர் ஊராகச் சென்று போதனை செய்தார்.

இப்படிப் போதனைகள் செய்துகொண்டு சென்றவராய்த் தம் சொந்த ஊரான நாசரத்துக்கு இயேசுநாதர் போய்ச் சேர்ந்தார். ஆரம்பத்தில் மக்கள் அவரைப் பெருமையோடும் உற்சாகத்தோடும் வரவேற்றார்கள்.

யூதர்களுக்கு ஜெருசலம் நகரில் மட்டும்தான் கோயில் உண்டு. ஆயினும், தத்தம் தேவைக்கு இயைய, ஒவ்வொரு ஊரிலும் ஜெபக் கூடங்களைக் (சினக்கோக் சபைகளை) கட்டிக் கொண்டு, இறைவனை யூதர்கள் வழிபட்டு வந்தார்கள்.

ஜெபம் செய்து, இறைவனை வழிபடுவதற்கும், மத சம் பந்தமான நூல்களைப் படித்து, விளங்கிக்கொள்வதற்கும் இந்த ஜெபக் கூடங்களை யூதர்கள் பயன்படுத்தி வந்தார்கள்.

ஜெபக் கூடங்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித் தனியே இடம் உண்டு. தங்களுக்கு என ஒதுக்கப்பட் டுள்ள இடத்துக்குச் சென்று, ஜெபம் செய்து இறை வழிபாடு செய்ய வேண்டும்.

வழிபாடு முடிந்ததும், மத நூல்களைக் கற்றறிந்த பண்டி தர்கள், ஏதாவது ஒரு பகுதியை, மத நூலிலிருந்து படித்து, அந்தப் பகுதியை மக்களுக்கு விளக்கம் செய்வார்கள். மக்கள் அதைக் கேட்டுக்கொண்டு இருப்பார்கள்.

சனிக்கிழமையை, யூதர்கள் ஓய்வு நாளாகக் கருதினார் கள். அன்று தினம் இறை வழிபாட்டைத் தவிர்த்து, வேறு எந்தக் காரியத்தையும் மதப் பற்றுள்ள யூதர்கள் செய்ய மாட்டார்கள்.

சனிக்கிழமை யன்று, ஆடவரும் பெண்டிரும் ஜெபக் கூடத்துக்கு வர வேண்டும் என்பது விதி.

நாசரத்துக்கு வந்திருந்தபோது, தாம் எப்பொழுதும் செல்கிற வழக்கப்படி, ஒரு சனிக்கிழமை யன்று, ஜெபக் கூடத்துக்கு இயேசுநாதர் போனார்.

ஆடவரும் பெண்டிரும் திரளாக அங்கே இருந்தார்கள். வழிபாடு முடிந்ததும், கூடத்தில் இருக்கும் போதகர், ஒரு ஆகமச் சுருளை எடுத்து, இயேசுநாதரிடம் கொடுத்தார்; அதை வாசித்து, மக்களுக்கு விளக்கம் கூறும்படி வேண்டினார்.

சுருளை வாங்கி, தம் கண்களில் பட்ட ஒரு பகுதியை இயேசுநாதர் படிக்கலானார்:

''இறைவன் என்னை அபிஷேகம் செய்தார். துன்புற்று நலிந்தோரிடையே நற் செய்தியைப் பரப்பும் பொருட்டு, இறைவன் என்னை இங்கு அனுப்பி உள்ளார். குருடர்களுக்குப் பார்வையைக் கொடுக்கவும், அடிமைகளுக்கு விடுதலை வழங்கவும், புண்பட்ட நெஞ்சினருக்கு ஆறுதல் சொல்லவும், இறைவனுடைய அன்பை மக்களிடையே பரப்பவும் நான் வந்துள்ளேன்'' என்று படித்தார்.



(இசையா 61· 1-2)

படித்து முடித்த பின்னர், ஆகமச் சுருளை, ஜெபக்கூடத்துப் போதகரிடம் திருப்பிக் கொடுத்தார்.

இயேசுநாதர் படித்த இந்த வாசகம் எழு நூறு ஆண்டுகளுக்கு முன்னர், இனி வரவிருக்கும் மெசியாவைப்பற்றி, இசையா என்னும் தீர்க்கதரிசி கூறின சொற்கள் ஆகும்.

இந்த வாசகங்கள் தம்மைக் குறிப்பிடுகின்றன என்றும்,

அவர்கள் எதிர்பார்த்திருந்த மெசியா தாம்தாம் என்றும் கூறி, அவற்றுக்கு இயேசுநாதர் விளக்கம் செய்தார்.

யூதர்கள் எதிர்பார்த்திருந்த மெசியா தாம்தாம் என்று கூறி, அதற்குச் சான்று காட்டும் பொருட்டு, வேதத்திலிருந்தே ஒரு மேற்கோள் எடுத்துக்காட்டி இயேசுநாதர் விளக்கியதும், ஜெபக் கூடத்தில் இருந்தவர்கள் ஆத்திரம் அடைந்தனர். ''இந்த ஊர் தச்சன் சோசப்பின் மகன் அல்லவா இவன்! இவன் தன்னை மெசியா என்று தைரியமாய்ச் சொல்லுகிறானே! மெசியாவைப் பாருங்கள் மெசியாவை!'' என்று ஏளனமாகப் பேசினார்கள்.

ஆத்திரமடைந்த சிலர், இயேசுநாதரைச் செங்குத்தான ஒரு பகுதிக்குக் கொண்டுபோய், அங்கிருந்து உருட்டித் தள்ளி, அவரைக் கொன்றுவிட முடிவு செய்தார்கள்.

ஆகவே, அவர்கள் இயேசுநாதரை அழைத்துக்கொண்டு ஊருக்கு வெளியே சென்றார்கள்.

குறிப்பிட்ட இடத்தை அடையு முன்னர், இவர்களிடமிருந்து இயேசுநாதர் நழுவி மறைந்துவிட்டார்.

தங்கள் விருப்பம் நிறைவேறாமல் ஏமாந்து அவர்கள் வீடு திரும்பினார்கள்

''சொந்த ஜனங்களிடையே தீர்க்கதரிசிக்கு மதிப்பு இராது'' என்று இயேசுநாதர் இவர்களைப் பற்றிக் கூறி இருக்கிறார்.

கப்பர்நகூம்

தம்மை அங்கீகரியாமல், சொந்த ஊர்க்காரர்களான நாசரத்து வாசிகள், செய்ய இருந்த கொடுமையிலிருந்து, தாம் தமது வல்லமையால் விலகி, இயேசுநாதர் கம்பர்நகூம் திரும்பினார். அந்த ஊரில் இருந்துகொண்டே, இனித் தாம் செய்ய வேண்டிய பணிகளைப்பற்றி அவர் சிந்திக்கலானார்.

இதற்குப் பல காரணங்கள் உண்டு. முதல் காரணம், இயேசுநாதருடைய முதல் சீடர்கள் ஐவரில், நத்தானியு

லைத் தவிர்த்து, மற்ற நால்வரும், கப்பர்நகூமையும் அதன் சுற்று வட்டாரத்தையும் சேர்ந்தவர்கள்.

இரண்டாவதாக, அந்த ஊர்,பெரிய வாணிபத் தலமாக விளங்கிற்று; அதனால் பல்வேறு நாட்டு மக்கள் கப்பர்நகூமுக்கு வந்து, வியாபாரம் செய்தார்கள். வியாபார நிமித்தம் மக்கள் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருக்கும் காரணத்தால், அந்த ஊரில் நடக்கும் நிகழ்ச்சி எதுவும், மற்ற ஊர்களுக்கு வெகு எளிதிலும் விரைவிலும் பரவத்தக்க நல்ல வாய்ப்பு இருந்தது.

அந்த ஊர் கெனசரெத் என்னும் மிகப் பெரிய ஏரிக்கரையில் இருந்தது. அதனால், அந்த ஊர்வாசிகளில் மிகப் பெரும்பாலோர், மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு, வயிறு வளர்த்து வந்தார்கள். இயேசுநாதரின் முதற் சீடர்கள் ஐவரில், நால்வர் செம்படவர் ஆவர்.

சைமன், ஆண்ட்ரு, ஜான், ஜேம்ஸ் இந்த நால்வரும் மீன் பிடித்து வாழ்க்கை நடத்தும் செம்படவர்கள். வீடு வாசல்களைத் துறவாமல், ஆரம்பத்தில் இயேசுநாதர்மீது நம்பிக்கை வைத்து, அவரைப் பின்பற்றும் சீடர்களாய் இவர்கள் இருந்தார்கள்.

ஜெருசலத்திலிருந்து, திரும்பிய பின், இந்த நால்வரும், தங்கள் ஊரிலே தங்கி மீன்பிடிக்கும் தொழிலைக் கவனித்து வந்தார்கள். அவர்களை அங்கேயே விட்டுவிட்டு, இயேசுநாதர் தம் சொந்த ஊரான நாசரத்துக்குப் போனார்.

பிறகு, அங்கிருந்து ஒரு நாள் காலையில், கப்பர்நகூமுக்கு இயேசுநாதர் வந்தார். அப்போது கெனசரெத் ஏரிக்கரையில் தம் சீடர்கள் நால்வரும், இரண்டு படகுகளும் இருப்பதை அவர் கண்டார்.

இயேசுநாதர் செய்த புதுமைகளின் பயனாய் அவர் புகழ் எங்குமே பரவி இருந்தது. அதனால் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் இயேசுநாதரை ஜனங்கள் பின் தொடர்ந்து மொய்த்தார்கள்.

இப்போதும் தம்மை அணுகி, மக்கள் நெருக்க வருவதை இயேசுநாதர் கவனித்தார்.

ஒரு படகு கரை ஓரத்தில் நின்றது. அதற்குள் இருந்து கொண்டு சைமனும் ஆண்ட்ருவும் தங்கள் வலையைத் தண்ணீரில் அலசிக்கொண் டிருந்தார்கள்.

மற்றொரு படகு இன்னும் சிறிது தூரத்தில் நின்று கொண்டு இருந்தது. அதில் ஜானும் ஜேம்ஸும் அவர்கள் தந்தை சேபேதேயுவும் தங்கள்வலையைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



ஜனக் கூட்டம் தம்மை நெருக்குவதைப் பார்த்ததும், இயேசுநாதர், சைமனும் ஆண்ட்ருவும் இருக்கும் படகில் ஏறிக்கொண்டு, அந்தப் படகை, சிறிது அப்பால் செலுத்தும்படி சைமனிடம் சொன்னார்.

அதன்படி சைமன் செய்ததும், படகில் இருந்தபடியே, இயேசுநாதர், கரையில் நின்ற மக்கள் கூட்டத்துக்கு உபதேசம் செய்தார்.

உபதேசம் முடிந்ததும், சைமன் பக்கம் திரும்பி, ''ஆழமான ஒரு இடத்தில் உன் வலையை வீசு'' என்று சொன்னார்.

உடனே, சைமன் அவரிடம், ''குருநாதா! இரவு முழுதும் பிரயாசைப்பட்டு வலை வீசினோம். ஒரு மீன்கூட விழவில்லை. ஆயினும் தங்களின் வார்த்தையை நம்பி, நான் வலையை வீசுகிறேன்'' என்று சொல்லி, வலையை ஏரிக்குள் வீசினார்.

என்ன ஆச்சரியம்! வலை நிறைய ஏராளமான மீன்கள் விழுந்திருந்தன! வலையைப் படகுக்குள் இழுக்க முடியவில்லை. இழுத்தால் வலை கிழிந்துவிட்டால் என்ன செய்வது? மற்றொரு படகில் இருக்கும் ஜானையும் ஜேம்ஸையும் துணைக்கு அழைத்துக்கொண்டு, வலையை இழுத்து, அதிலுள்ள மீன்களை இரண்டு படகுகளிலும் நிரப்பினார்கள். மீன்களின் பளு தாங்காமல், படகுகள் மூழ்கிவிடும்போல் தோன்றிற்று.

இந்தப் புதுமையைப் பார்த்ததும், சைமனால் சும்மா இருக்க முடியவில்லை. தனது தாழ்ந்த நிலையையும் இயேசுநாதரின் உயர்ந்த நிலையையும்பற்றி அவர் எண்ணத் தொடங்கினார். ''அண்ணலே! என்னை விட்டு விலகுங்கள்; நான் பெரும் பாவி!'' என்று கூவினார்.

இதைச் செவிமடுத்த இயேசுநாதர் அவரிடம், ''பயப்பட வேண்டாம். இனிமேல் மனிதர்களைப் பிடிக்கும் செம்படவனாக நீ விளங்குவாய்'' என்று சொன்னார்.

படகுகள் இரண்டும் கரை சேர்ந்தன. இயேசுநாதர் படகிலிருந்து இறங்கிக்கொண்டு ஆண்ட்ருவையும் சைமனையும் பார்த்தார். ''என்னைத் தொடர்ந்து வாருங்கள். மனிதர்களை வசீகரிக்கும் செம்படவர்களாக உங்களை நான் ஆக்குகிறேன்'' என்று கூறினார்.

இருவரும் அதன்படி செய்தார்கள். படகையும் மீன்களையும் வலையையும் அப்படியே போட்டுவிட்டு, இயேசுநாதரைத் தொடர்ந்து அவர் பின்னே சென்றார்கள்.

இவர்களை அழைத்ததைப் போலவே, ஜானையும் ஜேம்ஸையும் இயேசுநாதர் அழைத்தார்.

அவர்களும், அனைத்தையும் துறந்துவிட்டு, இயேசுவுக்குப் பின்னே சென்றார்கள்.

நத்தானியலும் பிலிப்பும் பக்கத்து ஊரில் இருந்து வந்து, இயேசுநாதருடன் சேர்ந்துகொண்டார்கள்.

இதன் பின்னர், தம் சீடர்களையும் அழைத்துக்கொண்டு, பொதுப் பணியில் இயேசுநாதர் ஈடுபடலானார்.

புதுமைகள்

உபதேசம் செய்வதன் மூலம் மக்களை நல் வழியில் செலுத்துவதையே இயேசுநாதர் பெரிதும் விரும்பினார். ஆயினும் தாம் தேவகுமாரன் என்பதை மாந்தருக்குத் தெரிவிக்கும் பொருட்டு, புதுமைகள் பலவற்றை இயேசுநாதர் புரிந்து இருக்கிறார். ஏறக்குறைய நாற்பது புதுமைகளைக் குறித்து எழுதப்பட்டுள்ளது அவரது வரலாற்று நூலில்.

அவர் செய்த புதுமைகள் பல திறப்பட்டன: இறந்தவர்களை உயிர்ப்பித்து இருக்கிறார்; நோயாளிகளைக் குணப்படுத்தி இருக்கிறார். பேய்களை விரட்டி ஓட்டி, பேய்பிடித்தவர்களைக் குணப்படுத்தி இருக்கிறார். இயற்கைச் சக்திகளை அடக்கி இருக்கிறார்; உணவு பெருகச் செய்து இருக்கிறார்.

ஆரம்ப காலத்தில் இயேசுநாதர் செய்த போதனைகளைக் காட்டிலும் அவர் புரிந்த புதுமைகளே மக்களை அதிகம் கவர்ந்தன என்று சொல்லலாம். இயேசுநாதரின் முக்கிய சீடர்களில் ஒருவரான பீட்டர் என்பவர், இயேசுநாதர் செய்த புதுமையைக் கண்டு பிரமித்து, அவரைக் கடவுள் என்று மனதார நம்பினார். வீடு வாசல்களைத் துறந்து, இயேசுநாதரின் சீடரானார். மற்றச் சீடரும் அப்படியே.

இயேசுநாதர் புரிந்த புதுமைகளை ஆங்காங்கே குறிப்பிடுவோம். கப்பர்நகூமில் இயேசுநாதர் இருந்தபோது, கப்பர்நகூமிலும், அதன் சுற்று வட்டாரங்களிலும், அவர் செய்த முக்கியமான சில புதுமைகளை மட்டும் இங்கே நாம் குறிப்பிடுவோம்.

இயேசுநாதர் இதுவரை புரிந்த புதுமைகள் நான்கு ஆகும்:

1. தண்ணீரைத் திராட்சை ரசமாக மாற்றியது.
2. அரண்மனை அதிகாரியின் மகனைக் குணப்படுத்தியது.
3. எதிரிகளின் பிடிப்பிலிருந்து அவர்களுக்குத் தெரியாமல் நழுவியது.
4. வலையில் ஏராளமான மீன்களை விழுமாறு செய்தது.

இந்த நான்கு புதுமைகளுக்குப் பின்னர், இயேசுநாதர்

செய்த புதுமை, பேய்பிடித்தவன் ஒருவனைக் குணப்படுத்திய தாகும்.

ஒரு சனிக்கிழமை யன்று, வழக்கம்போல் இயேசுநாதர் உபதேசம் செய்துகொண் டிருந்தார். கூட்டமாக வந்து, அவர் கூறுவதை மக்கள் கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந் தார்கள்.

எந்த விஷயத்தை எடுத்து உபதேசம் செய்தாலும், இயேசுநாதர், சுருக்கமாகவும் அமைதியாகவும் பேசுவார்; குறிப்பாகச் சுட்டிச் சொல்வார்; புரியாவிட்டால் விளக்கிச் சொல்வார். ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும்படி பேசுவார்; நம்பிக்கை ஏற்படும் முறையில் நயமாக எடுத்துக் கூறுவார்; கதைகள் மூலம் விளக்கிப் புரியும்படி போதனை செய்வார்.

அவர் பேசுவதை மக்கள் விருப்போடு கேட்பார்கள்.

இப்படி ஒரு நாள் மக்கள் கேட்டுக்கொண்டிருந்தபோது, கூட்டத்தி லிருந்த மனிதன் ஒருவன் திடீரெனப் பெரும் கூச்சலிட்டுக் கத்தினன். ''நாசரத்தைச் சேர்ந்த இயேசுவே! எங்களை நாசமாக்கும் பொருட்டு நீர் வந்திருக்கிறீரா?'' என்று அலறினன்.

முதலில் இப்படி பொதுப்படையாகப் பேசியவன், பிறகு, தனிப்பட்ட முறையில் தன்னைக் குறித்து மட்டும் பேசத் தொடங்கினன்: ''ஐயா! என்னை ஒன்றும் செய்யாது விட்டு விடும்! ஒன்றும் செய்யாது விட்டுவிடும்!'' என்று அலறினன்.

இந்த மனிதன் இவ்வாறு அலறியதும், சிறிதும் தயக்க மின்றி, இயேசுநாதர் அவனிடம் அதிகார தோரணையில் பேசினர்: ''இந்த மனிதனைப் பிடிப்பதை விட்டுவிட்டு, அப்பால் போ!'' என்று அதட்டினர், அவனைப் பிடித்திருந்த பேயைப் பார்த்து.

இயேசுநாதர் இவ்வாறு அதட்டியதும், இதுவரை அந்த மனிதனை ஆட்டி அலைக்கழித்த பேய், அவனைவிட்டு விலகிப் போய்விட்டது.

பேய் அகன்றதால் அந்த மனிதன் குணமடைந்தான்.

இந்த நிகழ்ச்சியைக் கண்ணுற்ற மக்கள் அதிக ஆச்சரியம் அடைந்தார்கள்; இதுவரை இயேசுநாதரை நம்பாது

இருந்தவர்களும், நிகழ்ச்சியை நேரில் பார்த்ததும், அவர் தேவகுமாரனாய் இருக்கக் கூடும் என்று நம்பினார்கள்.

* * *

இயேசுநாதரின் சீடர்களில் சைமன் பீட்டர் என்பவர் முதன்மையானவர். அவரும் அவருடைய தம்பி ஆண்ட்ருவும், கப்பர்நகூமில் ஒரு சிறு வீட்டில் சேர்ந்து வசித்தார்கள். சைமன் பீட்டருக்குத் திருமணம் ஆகி இருந்தது; அவருடைய மாமியாரும் அவர்கள் கூடவே இருந்தாள், தீராத காய்ச்சலால் சிரமப்பட்டுக்கொண்டு, படுக்கையோடு படுக்கையாக அவள் கிடந்தாள். எவ்வளவோ வைத்தியம் செய்தும், நோய் குணமாகவில்லை.

ஜெபக் கூடத்தில் நடந்த நிகழ்ச்சியை, இயேசுநாதர் பேயை ஓட்டி ஒருவனைக் குணப்படுத்திய புதுமையை, ஜானும் ஜேம்ஸும் பார்த்திருக்க வேண்டும். ஆகவே, அவர்கள் இருவரும் இயேசுநாதரிடம், ''குருநாதா! சைமன் பீட்டரின் மாமியார் நோய்வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாய்க் கிடக்கிறாள். பீட்டரின் வீட்டுக்கு வந்து, அந்த அம்மையாரைத் தாங்கள் குணப்படுத்த வேண்டும்'' என்று வேண்டினர்.

இயேசுநாதரும் சம்மதித்து, பீட்டரின் இல்லத்துக்குச் சென்றார். அங்கே ஒரு பெண்மணி நோயுற்று, கட்டிலில் படுத்திருப்பதை இயேசுநாதர் கண்டார். அருகே சென்று, அந்தப் பெண்மணியின் கையைப் பிடித்துத் தூக்கி, உட்காரும்படி இயேசுநாதர் செய்தார்.

உடனே, நோய் முற்றும் குணமாகி, அந்தப் பெண் எழுந்து உட்கார்ந்தாள். உள்ளத்தில் மகிழ்ச்சியும் உடலில் தெம்பும் ஏற்பட்டன. அந்தப் பெண் உணர்ச்சி வயப்பட்டுப் போனாள்; உடனே கட்டிலைவிட்டு இறங்கி, இயேசுநாதருக்குப் பணிவிடைகள் புரியவும், விருந்து வைத்து உபசரிக்கவும் அவள் ஆர்வத்துடன் முன்வந்தாள்.

பேய் பிடித்தவனைக் குணப்படுத்திய செய்தியும், பீட்டரின் மாமியாரைச் சுகப்படுத்திய புதுமையும், காட்டுத் தீ போல் வெகு விரைவில் ஊர் முழுதும் பரவின.

* * *

ஓய்வு நாள் அன்று, அதாவது சனிக்கிழமை யன்று, இறைவன் பணியைத் தவிர்த்து வேறு எதையும் செய்யக் கூடாது என்பது, யூதர்களிடையே நிலவிய ஒரு கட்டுப்பாடு. இந்தக் கட்டுப்பாட்டை மீறி நடப்பது குற்றமாகக் கருதப் படும். ஆகவே ஓய்வு நாள் முடிவடையும் நேரத்தை—அதாவது மாலை நேரம் வருவதை—எதிர்பார்த்து மக்கள் காத்திருந்தார்கள். அது வந்ததும், நொண்டியும் நுடமும், கூனும் குருடும், செவிடும் ஊமையும், பேய் பிடித்தோரும் பிணியுற்றோரும் பீட்டரின் வீட்டு முன்னே வந்து குழுமி விட்டார்கள்.

நோயுற்று நலிந்திருக்கும் மக்கள் தம்மை நாடி வந்திருப் பதை அறிந்ததும், இயேசுநாதர் தமது திருக்கரத்தை ஒவ் வொரு நோயாளியின் தலைமீது வைத்து ஆசீர்வதித்து, அவர் களுக்கு இருக்கும் நோயைக் குணப்படுத்தினார். ஓய்வு நாளான அன்று, சிறிதும் ஓய்வு ஒழிச்சல் இன்றி, நோயாளி களைக் குணப்படுத்திய பின்னர், கடைசியாக, பீட்டரின் வீட்டுக்குள் சென்று ஓய்வாக இருந்தார்.

மறு தினம், பொழுது புலர்வதற்கு முன்னரே, பிறருக் குத் தெரியாமல் எழுந்து, ஒரு தனி இடத்துக்குச் சென்று, இயேசுநாதர் பிரார்த்தனை செய்தார்.

மக்களோ அவரைத் தரிசிக்கும் பொருட்டும், நோய் களைக் குணப்படுத்திக்கொள்ளவும் திரள் திரளாக வந்து குழுமிவிட்டார்கள்.

பீட்டரும் அவர் குடும்பத்தாரும் எழுந்துபார்த்தபோது, இயேசுநாதரைக் காணோம். திகைப்புற்று, அவரை அவர்கள் தேடத் தொடங்கினார்கள். கடைசியாக, அவர் இருக்கும் இடத்தை அறிந்து, அங்கே போனார்கள். இனி எங்கும் போய்விடாமல் கப்பர்நகூமிலேயே தங்கிவிட வேண்டும் என்று இயேசுநாதரை அவர்கள் வேண்டினார்கள்.

தாம் ஒரு இடத்திலேயே தங்கி இருக்க முடியாது என்றும், தாம் பரப்ப விரும்பும் நற்செய்தியைப் பல இடங்

களுக்கும் சென்று தாம் பரப்ப வேண்டு மென்றும் இயேசு நாதர் அவர்களிடம் கூறினர்.

* * *

இது நடந்த சில தினங்களுக்குப் பின்னர், தொழு நோயால் நொந்து வருந்தும் மனிதன் ஒருவன் இயேசு நாதரிடம் வந்தான். ''ஐயனே! அடியேனைப் பீடித்திருக்கும் நோயைக் குணப்படுத்தி அருள்புரியுங்கள்'' என்று இயேசு நாதரை அவன் இறைஞ்சினன்.

பாலஸ்தீன நாட்டில் தொழு நோயினர் பெரிதும் அவதிப்பட்டார்கள். அந்த நோயால் பீடிக்கப்பட்டோர், பொது இடங்களுக்குப் போதல் கூடாது. தப்பித் தவறித் தெரியாமல் யாரும் தன் அருகே வருவதைப் பார்த்தால், ''தொழு நோயாளி இங்கே இருக்கிறேன்; அருகே வராதீர்கள்; அப்பால் செல்லுங்கள்'' என்று கூவி அவன் தெரிவிக்க வேண்டும். இறைவனுடைய அளவற்ற கோபத் துக்கு இலக்கானவர்கள்தாம் தொழு நோயால் துன்பப்படு வார்கள் என்பது யூதர்களின் நம்பிக்கை. அதனல் தொழு நோயாளிகளுடன் தொடர்புகொள்ள யூதர்கள் அஞ்சு வார்கள். ஆகவே, குறிப்பிட்ட ஒரு தனித்த இடத்தில் அவர்கள் வசிக்க வேண்டும்; ஊருக்குள் வரவே கூடாது.

தீராத நோய்களை எல்லாம் இயேசுநாதர் தீர்த்துக் குணப்படுத்துகிறார் என்பதை, தொழு நோயாளி ஒருவன் எப்படியோ தெரிந்துகொண்டான். இயேசுநாதர் இருக்கும் இடத்துக்குப் போய் அவரைச் சந்தித்தான்.

கட்டுப்பாட்டை மீறித் தம்பால் வந்திருக்கும் அந்தத் தொழு நோயனை இயேசுநாதர் கடிந்துகொள்ள வில்லை. அவனுடைய மனநிலையையும் அவன் படும் அவதியையும் கண்டு இயேசுநாதர் அவன்மீது பரிவுகொண்டார். தமது திருக் கரத்தை நீட்டி, அழுகி நாற்றமெடுத்துச் சீழ்வடியும், அந்த நோயாளியின் உடலை இயேசுநாதர் அன்போடு தொட்டார். ''நோய் அகன்று நீ குணமடைவாய்!'' என்று வாஞ்சையுடன் கூறினர்.

தொழுநோய் அகன்று அந்த மனிதன் குணமடைந்தான்.

இந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவிவிட்டது. மக்கள் திரள் திரளாக வந்து, இயேசுநாதரை மொய்க்கத் தொடங்கினார்கள். ஆகவே, ஊருக்குள் திரும்பாது, இயேசுநாதர் வனத்துக்குப் போய் விட்டார். அங்கு ஓய்வாகத் தியானத்தில் இருந்தார்.



போதிய அளவு சந்தடி குறைந்த பின்னர், கப்பர்நகூம் திரும்பினார்.

இயேசுநாதருடைய புகழும் பெயரும் பாலஸ்தீன நாடு முழுவதும் பரவத்தொடங்கின.

இதனால் பண்டிதரும் பாமரரும் பரிசேயரும் சதுசேயரும் வந்து, இயேசுநாதர் செய்யும் போதனைகளைக் கேட்டார்கள். புதுமை மோகத்தால் உந்தப் பெற்று, உண்மை நிலையைப் புரிந்துகொள்ள விரும்பி இவர்கள் வந்திருந்தார்கள்.

ஒரு வீட்டினுள்ளே இயேசுநாதர் இருந்தார். வாயிலில் ஜன நெரிசல் அதிகமாக இருந்தது. இது சமயம் பரிச வாயுவினால் சிரமப்படும் மனிதன் ஒருவனைக் கட்டிலில் படுக்க வைத்து, தூக்கி வந்திருந்தார்கள். உடனே இயேசுநாதரிடம் காட்டிக் குணப்படுத்தாவிட்டால், உயிருக்கு ஆபத்து நேரலாம் என்று அவர்கள் அஞ்சினார்கள். உள்ளே தூக்கிச் செல்வதற்கு வெளியே இருந்த கூட்டம் இடம் கொடுக்கவில்லை. உபதேசம் முடிந்ததும், இயேசுநாதர் வேறு இடங்களுக்குப் போய்ப் பிரார்த்தனையில்

அமர்ந்துவிட்டால் என்ன செய்வது?

ஆகவே, நோயாளியைத் தூக்கி வந்திருந்தவர்கள் ஒரு யோசனை செய்தார்கள். பாலஸ்தீனத்தில் வீடுகள் தணிவாய் இருக்கும். எளிதில் முகட்டுமீது ஏறி, கூரையை அவர்கள் பிரித்தார்கள். கட்டிலுடன் நோயாளியைத் முகட்டுக்குத் தூக்கிப் போய், தாங்கள் செய்த ஓட்டை வழியே நோயாளியை இயேசுநாதர் முன்னர் இறக்கினார்கள்.

தம்மீது அபார நம்பிக்கை வைத்திருக்கும் இவர்களைக் பார்த்ததும், இயேசுநாதர் இவர்கள்மீது பரிவுகொண்டார். நோயாளியைப் பார்த்து, ''மகனே! நீ செய்த பாவங்களுக்கு மன்னிப்புக் கிடைத்துவிட்டது'' என்று கூறினார்.

இப்படி இயேசுநாதர் கூறியதும் அருகில் இருக்கும் பரிசேயரும், மற்றவர்களும் முணுமுணுத்தார்கள். ''கடவுளைத் தவிர்த்து, வேறு யாருக்காவது ஒருவன் செய்த பாவங்களை மன்னிக்க அதிகாரம் உண்டா என்ன? பாவத்தைத் தாம் மன்னிப்பதாகக் கூறி, கடவுளுக்கு விரோதமான காரியத்தை இந்த மனிதர் செய்கிறாரே!'' என்று தங்களுக்கு இடையே பேசிக்கொண்டார்கள்.



பேசிக்கொண்டவர்களின் மன நிலையைஇயேசுநாதர் தெரிந்துகொண்டார். தமக்கு அத்தகைய அதிகாரம் உண்டு எனக் காட்ட விரும்பி, புதுமை ஒன்று செய்தவராய், நோயாளியை நோக்கி, ''எழுந்து படுக்கையைச் சுருட்டி எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ!'' என்று கூறினார்.

உடனே அந்த நோயாளி எழுந்தான்! படுக்கையைச் சுருட்டிக் கையில் எடுத்துக்கொண்டு, அங்கிருந்து அவன் புறப்பட்டான்.

இந்த நிகழ்ச்சியைப் பார்த்ததும், அருகே இருந்த வேதபாரகரும் பரிசேயரும் மலைத்துப் போனார்கள். ஆயினும்

இயேசுநாதரைக் கடவுள் என்று ஏற்றுக்கொள்ள, அவர்கள் மனம் ஒப்பவில்லை.

ஆரம்பத்தில் பொது மக்கள், இயேசுநாதர் புரிந்த புதுமைகளைக் கண்டும், கேள்வியுற்றும், வியப்படைந்து, அவர்பால் வந்தனர். நேரில் சந்தித்த பின்னர், அவருடைய நடையுடை பாவனைகள் அனைத்திலும் தெய்வீகமான ஒரு வசீகர சக்தி இருப்பதைக் கண்டு, அவருக்கு மரியாதை செலுத்தலாயினர்.

ஆயினும், பரிசேயரும் வேதபாரகரும், ஆச்சாரியரும், அரசியல் சார்புடையவர்களும், இயேசுநாதரின் போக்கைக் கவனித்தனர். இயேசுநாதரின் போதனைகள் தங்கள் வாழ்வுக்குச் சாதகமாய் இருக்குமா அல்லது பாதகமாய் இருக்குமா என்பதை அவர்களால் நிதானிக்க முடியவில்லை. அதனால் நடப்பது நடக்கட்டும் என்று அவர்களால் சும்மா இருக்கவும் முடியவில்லை. வெளிப்படையாக முன்வந்து, இயேசுநாதருடன் சேர்ந்துகொண்டு, காரியங்களைச் செய்வதற்கும் தைரியம் வரவில்லை.

இரண்டும் கெட்ட நிலையில் திண்டாடி, அவர்கள் தவித்துக்கொண் டிருந்தார்கள்.

எதிர்ப்பின் ஆரம்பம்

எந்த மதத்துக்கும் முக்கியமான இரு அம்சங்கள் உண்டு:

1. அந்தந்த மதத்தினர் நம்புகின்ற கோட்பாடுகள்.
2. அந்தந்த மதத்தினர் கடைப்பிடிக்கின்ற ஆசாரங்கள்.

இந்த இரண்டு அம்சங்களும் இல்லாத மதமே இருக்க முடியாது. ஆயினும், இந்த இரண்டில் எது அதிக முக்கியத்துவம் உடையது?

ஒரு சாரார் மதத்தின் உயிர் நாடியாக இருப்பது கோட்பாடுகள்தாம். ஆகவே, கோட்பாடுகளுக்குத்தான்

அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்'' என்று கூறுகின்றனர்.

மற்றொரு சாரார், ஆசாரங்களுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ''ஆசாரம் என்னும் கட்டுக்கோப்புக்குள் நிற்காத மதம், நாளடைவில் அழிந்துபோகும் என்றும், ஆகவே, ஆசாரத்துக்கே முதலிடம் கொடுக்க வேண்டும்'' என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இயேசுநாதர் காலத்தில், பரிசேயர் என்று ஒரு பிரிவினர் யூத மக்களிடையே இருந்தனர். ஆசாரத்துக்கே முதலிடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லும் கூட்டத்தினர் இவர்கள். இவர்களுக்கு மக்களிடையே, பொதுவாக, செல்வாக்கும் மதிப்பும் இருந்தன; எதற்கு எடுத்தாலும், ''ஆசாரம்! ஆசாரம்!'' என்று இவர்கள் சொல்லுவார்கள். நடைமுறைச் சம்பிரதாயத்துக்கு முரணாக யாரும் நடப்பது தெரியவந்தால், அப்படி நடப்பவனை, ''ஆசாரக் குறைவானவன்'' என்று சொல்லிக் கண்டிப்பார்கள். சிற்சில சமயங்களில் எதிர்த்துக் கிளர்ச்சியும் செய்வார்கள். இயேசுநாதரை எதிர்த்தவர்களில் பரிசேயர்கள் முக்கியமானவர்கள். இயேசுநாதர்மீது இவர்கள் சாட்டிய குற்றங்களில், ''ஆசாரக் குறைவாக'' அவர் நடந்துகொண்டார் என்பதும் ஒன்று.

சனிக்கிழமை யன்று, ஓய்வாக இருக்கவேண்டும் என்பது யூத சமயக் கோட்பாடு; அன்று, இன்னின்ன காரியங்களைச் செய்வது ஆசாரமானது, இன்னின்ன காரியங்களைச் செய்வது ஆசாரக் குறைவானது என்று பரிசேயர்கள் ஒரு வரையறை செய்து இருந்தார்கள். இந்த வரையறையை யார் மீறினாலும், ''ஆசாரக் குறைவானவன்'' என்று கூறி, அவர்மீது குற்றம் சுமத்தப் பரிசேயர்கள் தயங்குவது இல்லை.

இயேசுநாதரையும் ''ஆசாரக் குறைவானவன்'' என்று பரிசேயர்கள் கண்டித்து இருக்கிறார்கள். அந்தச் சம்பவம் வருமாறு: